Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 02 (04.02.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :125

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-553)

# வட-கிழக்கு முழுதும் இன்று கறுப்பு நாள்!

## கட்டடங்கள், வீதிகளில் கறுப்புக்கொடிகள் பறக்கின்றன

இலங்கையின் 55ஆவது சுதந்திர தினத்தையொட்டி இன்று வட-கிழக்குப் பகுதியெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கதினமாக அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

தமிழ்மக்களுக்கு இன்னமும் சுதந்திரமான வாழ்வு மலரவில்லை என்பதை வெளிப்படுத்துமுகமாக,

வட-கிழக்கில் உள்ள வெகுஜன அமைப்புக்கள் பல, இன்றைய தினத்தைக் கறுப்பு நாளாக அனுஷ்டிக்கும்படி பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

யாழ்.நகரம் உட்பட குடாநாட்டின் அநேகமான பகுதிகளில் நேற்று மாலையே வீதிகள் பலவற்றிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் செல்லும் வாகனங்களிலும் கறுப்புக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. (க,லி)

## சுதந்திர தினம் எமக்கு கறுப்பு நாளே

# மூவாயிரம் மாணவர்கள் திரண்டு வவுனியாவில் மௌன ஊர்வலம்

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், வவுனியா தமிழ் மாணவர் சமுதாயத்தின் ஏற்பாட்டில், நேற்று வவுனியாவில் நடைபெற்ற மௌன ஊர்வலத்தில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து காலை 10 மணிக்குப் புறப்பட்ட பேரணி மாவட்டச் செயலகத்தை 11.30 இற்குச் சென்றடைந்தது. மௌன ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

சுதந்திர தினம் நடக்கும் இவ்வேளையில் தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றும், அகதி முகாம்களில் துன்பமுடன் அவலவாழ்வு வாழ

(10ஆம் பக்கம் பார்க்க)



திருமலை கோபாலபுரத்தில் இம்மாவீரர் நினைவுத்தூபி புனரமைக்கப்பட்டபோதே கடற்படையினரால் அது தடுக்கப்பட்டதுடன் அங்கு புதிய முகாமொன்றும் அமைக்க முயற்சியெடுக்கப்பட்டது.

# தமிழ்ப் பெண் கைதிகள் மீது பாலியல் துன்புறுத்தல்கள்!

## வெலிக்கடையிலிருந்து கண்ணீர்க் கடிதம்

(நமது நிருபர்)

**வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள - பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான தமிழ்ப் பெண் அரசியற்கைதிகள், அங்கு சமூகவிரோதக் குற்றச்சாட்டுக்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிங்களக் கைதிகளாலும், சிறையதிகாரிகளாலும் பாலியல்ரீதியாக துன்புறுத்தப்பட்டு வருகின்றனர்.**

இது தொடர்பாக - வெலிக்கடையிலுள்ள தமிழ்ப் பெண் அரசியற் கைதிகள் தமது பரிதாபநிலையை கடிதம் வழியாக களுத்துறையிலுள்ள சிறைக்கைதிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதுடன் -


இவ்விடயத்தை வெளியுலகிற்குக் கொண்டு வருமாறும் கோரியுள்ளனர்.

தம்மீது மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் பற்றி எடுத்துச்சொல்வதற்குத் தாம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைப் பகுதிக்கு வெளியாட்கள் எவரும் வருவதுமில்லை என்றும் அவர்கள் தமது கடிதத்தில் வேதனை பீறிடக் குறிப்பிட்டுள்ளனர்.

வெலிக்கடையில் - ஏழு தமிழ்ப் பெண்களின் வழக்குகள் முற்றுப்பெறாத நிலையிலும், இருவர் வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



ஒரு பக்கம் சிறைக்குள்ளேயே சிதைப்பு, மற்றப் பக்கம் சுதந்திரத்துக்கு உற்சவம் பார்..!

## யாழ். வரும் பிரான்ஸ் பிரதி அமைச்சர்

பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வரும் பிரான்ஸின் உதவி வெளிவிவகார அமைச்சர் றேனோல்ட் முசோலியன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சூரிச் செல்லும் புலிகள் தரப்பினர் அங்கு வாழும் தமிழர்களுடன் சந்திப்பு!

## பின்பே பேர்ளின் நகருக்குப் பயணமாவர்

பேர்ளின் நகரில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக, சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் குழுவினர் நேற்று கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டுச்சென்றதாக ஏ.பி. செய்தி தெரிவித்தது.

முன்னதாகக் கிளிநொச்சியிலிருந்து நேற்றுக்காலை உலங்கு வானூர்தி மூலம் சு.ப.தமிழ்ச்செல்வன், புலித்தேவன், அலெக்ஸ், தொல்காப்பியன் ஆகியோர் கொழும்புக்குப் புறப்பட்டுச்சென்றனர்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளும் மூத்த தளபதி கேணல் கருணா, மட்டக்களப்பிலிருந்து உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்குச் சென்றார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பொது அமைப்பு பிரதிநிதிகளை நம்பியார் செயலகத்தில் சந்திப்பார்

## உயர் பாதுகாப்பு வலயம் பற்றி மக்கள் கருத்தறிய முயற்சி



(யாழ்ப்பாணம்)

முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் நாளை யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளார்.

நாளை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வரும் முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியார், பலாலியில் யாழ்.குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வடக்குக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் நந்தன துடுவத்த ஆகியோருடனும் மற்றும் இராணுவ உயரதிகாரிகளுடனும் சந்தித்து-இராணுவ உயர்மட்ட மாநாடு ஒன்றை நடாத்தவுள்ளார்.

பின்னர் இராணுவ நிலைகளுக்கும் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கும் விஜயஞ்செய்து அவற்றைப் பார்வையிடவுள்ளதுடன், அவற்றிற்கு அருகிலுள்ள மக்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களைப் பிடித்த வழக்கு

# 8 பொதுமக்கள் குடத்தனைக்கு செல்வதற்குத் தடை விதிப்பு!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு நடுக்குடத்தனையில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு இரு சிப்பாய்களைப் பிடித்து வைத்திருந்த சம்பவத்தை அடுத்து, கைது செய்யப்பட்ட எட்டு இளைஞர்களையும் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் அனுமதி வழங்கினார்.

நேற்றுமாலை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி அ.பிரேம்சங்கர்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# இன்றைய நாள் இனிய நாள்

## 04-02-2003 - செவ்வாய்க்கிழமை

மேடம் :- திரவிய லாபம், இறைபயம், மனக்கவலை, தனவரவு, குடும்பசுகம்.

இடபம் :- உறவினர் நன்மை, பெரியோர் மதிப்பு, தேகசுகம், சந்தோஷம்.

மிதுனம் :- அதிகாரம், குடும்ப மகிழ்ச்சி, விவாகாதி நன்மை, சத்துரு வெற்றி.

கர்க்கடகம் :- பொருளாதாரக்கஷ்டம், அதிக பிரயாசை, பெண்களால் நன்மை.

சிங்கம் :- நற்கீர்த்தி, சிநேக நன்மை, பல வழிகளாலும் செலவு, மனமகிழ்ச்சி.

கன்னி :- தேக ஆரோக்கியம், குடும்ப சிறப்பு, பொருள் வரவு, லட்சுமிகரம்.

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

துலாம் :- தேகமெலிவு, வாக்குக் கலகம், தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி.

விருச்சிகம் :- காரிய சித்தி, பெண்களால் சுகம், பெரியோர் மதிப்பு, நன்மை.

தனு :- குடும்ப மனஸ்தாபம், தேக ஆரோக்கியம், மனமகிழ்ச்சி.

மகரம் :- களஸ்திர சுகம், சௌக்கியம், தொழில் விருத்தி, தரும காரியம்.

கும்பம் :- கோப மிகுதி, சத்துரு வெற்றி, புத்திரரால் கவலை, புத்திக்குறைவு.

மீனம் :- தனதானிய நிறைவு, உயர்ந்த நிலை, வாக்குவசீகரம், நன்மை.

## திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்ப மையம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் விவசாயம், மீன்பிடி, கால்நடை சம்பந்தமான தகவல் தொழில்நுட்ப மையமொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தால் இத்தகவல் தொழில்நுட்ப மையம் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் மேற்படி துறைகள் சம்பந்தமான தகவல்களை இத்தொழில்நுட்ப மையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரியவருகின்றது.

(க,ரா)

## சிக்கன கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 10 ஆவது நிர்வாகிகளின் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக பெ.சண்முகநாதன், உபதலைவராக ஆ.சிவபாலச்சந்திரன், செயலாளராக ம.விவேகானந்தன், பொருளாளராக மகேஸ்வரி கீர்த்திநாதன் ஆகியோரும் மூன்று நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண துடுப்பாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், தலைவராக - டி.எம்.வேதாபரணம், செயலாளராக என்.ரவீந்திரா, உபசெயலாளர் - பொருளாளராக எஸ்மோகனராஜ் ஆகியோரும் உபதலைவர்களாக கே.பூபாலசிங்கம், D.R.அருமைநாயகம், R.சிறீதரன், P.முருகவேள், எஸ்.சிறீக்காந்தன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக V.பாலசிங்கம், R.செல்வராசா, A.J.ஜேக்கப், P.பார்த்தீபன், S.தவநேசன் ஆகியோர் சங்கத்தின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆங்கில மருந்து வணிகர் மன்ற அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரின் அவசர கலந்துரையாடல், நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு காங்கேசன்துறை வீதியிலுள்ள யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்க தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

### 2003 ஆம் ஆண்டுக்குரிய அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் என்பவற்றைச் சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவற்றை சேவிஸ் செய்வதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

சேவிஸ் செய்தல் தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்ட செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில், அலுவலக நாட்களில் காலை 9.30மணி தொடக்கம் பி.ப.4 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்" என குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப்பெட்டியிலோ 2003.2.18 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும்.

அன்றைய தினம் பி.ப.3மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.

*சேவிஸ் விபரம்*

1. கணனி - Computer
2. புகைப்படப்பிரதி இயந்திரம் - Photo Copier
3. றோணியோ இயந்திரம்
4. தட்டச்சு இயந்திரம்
5. பக்ஸ் இயந்திரம்
6. மின்பிறப்பாக்கி - Generator
7. வாகனங்கள்
   - அ. பிக்கப்
   - ஆ. வான்
   - இ. கார்
   - ஈ. மோட்டார் சைக்கிள்
   - உ. லொறி

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலாளரும்
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-554)

# இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபை

## பதவி வெற்றிடங்கள்

பனை அபிவிருத்திச் சபை, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ள 'கற்பகம்' விற்பனை நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் விற்பனை உதவியாளர்களாகக் கடமையாற்ற க.பொ.த (சாதாரணம்/உயர்தரம்) சித்தியடைந்த 25 இற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 10.02.2003.**

மேலதிக விபரங்களுக்கு பனை அபிவிருத்திச் சபையின் கொழும்பு நகர அலுவலகம், யாழ்.தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
244, காலி வீதி,
கொழும்பு 04.
01-586820.

பனை அபிவிருத்திச்சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021-2222034

(சி-556)

ராஜா
யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா


10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
எம்.ஜி.ஆர்., ராஜசுலோசனா நடித்த
இதயக்கனி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER
(சி-544)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள

திரு. எஸ். கோபாலசிங்கம்

அவர்களின் கூட்டுறவு சேவை சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

- நெடுந்தீவு கிழக்கு நண்பர்கள்.

(சி-557)

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

### 2003 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை மாவட்ட செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்று அலுவலக நாட்களில் காலை 9.30 மணிதொடக்கம் பி.ப. 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2003.02.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் எனும் விலாசமிட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'பொருட்கள், சேவைகள் வழங்குநர்களை பதிவுசெய்தல் எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

1. கணனி, நிழற்பட பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களை வழங்குதலும் அவற்றினை திருத்துதலும்.
2. காகிதாதிகள், எழுதுபொருட்கள் வழங்குதல்.
3. பாவனைப்பொருட்கள் (ஈர்க்கில் தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோரின் முதலியன)
4. மரத்தளபாடங்கள்.
5. உருக்குத் தளபாடங்கள்.
6. கட்டட, தளபாடத் திருத்தம் செய்வதும் அதற்குரிய பொருட்களும்.
7. இரும்புப் பொருட்களும் மற்றும் மூலப்பொருட்களும்
8. பீங்கான் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள்
9. மின் உபகரணங்களும் உதிரிப் பாகங்களும்.
10. இறப்பர் முத்திரைகள்.
11. சீருடைத் துணிகள் மற்றும் துணிவகைகள்.
12. மின் பிறப்பாக்கி, மின் மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும் திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-555)

உ
சிவமயம்

# யாழ். கந்தர்மடம் - பழம் வீதி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# மஹா கும்பாபிஷேகம்

கர்மாரம்பம் : சித்திரபானு தை 20 (03.02.2003) திங்கள் காலை 6.00 மணி

யாகாரம்பம் : சித்திரபானு தை 21 (04.02.2003) செவ்வாய் காலை 6.00 மணி

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு : சித்திரபானு தை 23 (06.02.2003) வியாழன் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

மஹா கும்பாபிஷேகம் : சித்திரபானு தை 24 (07.02.2003) வெள்ளி காலை 8.50 மணிமுதல் 9.30 மணிவரை

**மஹா கும்பாபிஷேக புனித நாளில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**

*குறிப்பு : கும்பாபிஷேகம் நடைபெறும் தினத்தில் பால், தயிர், இளநீர், புஷ்பம், பூமாலை, தேங்காயெண்ணெய் முதலிய அபிஷேகத்துக்குரிய பொருட்களை வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.*

சிவஸ்ரீ ப.சேசமஸ்கந்த சிவாச்சாரியார்,
ஆதீனகர்த்தா.
03.02.2003

இங்ஙனம்,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்
திருப்பணிச் சபை.

(228)

# அமெரிக்கா அழைத்தால் மறுபேச்சின்றி செல்லுங்கள்

## மிலிந்த மொறகொட ஆலோசனை

(கொழும்பு)

“அமெரிக்கா எங்கு கூப்பிட்டாலும் ஏன், எதற்கு என்று கேட்காமல் அங்கு செல்லுங்கள்’ எனக் கூட்டமொன்றில் ஆலோசனை தெரிவித்திருக்கிறார் அமைச்சர் மிலிந்த மொறகொட.

கொழும்பில் சர்வதேச நிறைவேற்றுத் தரத்திலுள்ள சேவையாளர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் திடீரென அழைத்து வருமாறு கூறினார். நான் அவரிடம் எங்கு, எதற்கு என்று கேட்கவில்லை. இங்கு வந்த பின்னர்தான், இந்தக் கூட்டத்திற்கு அழைத்தார் எனத் தெரிய வந்தது.

அதுபோன்றே அமெரிக்கா எங்கு அழைத்தாலும் செல்லத் தயா[illegible]க இருங்கள் என அமைச்சர் மிலிந்த மொறகொட இக்கூட்டத்தில் மேலும் தெரிவித்தார்.

### -யாழ்.வைத்தியசாலையில்

# டெங்கு பரிசோதனை மருந்து கையிருப்புக் குறைகிறது

யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோயை இனங்காணப் பயன்படுத்தப்படும் மருந்து முடிவுறும் நிலையில் இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக சுகாதர ஸ்தாபனம் மூலமே டெங்கு நோயை இனங்காணும் சிறு தொகுதி மருந்து போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. சுமார் 48 பேருக்குப் பரிசோதனை செய்யக்கூடிய அம்மருந்தில் அரைவாசி முடிந்து விட்டதாகவும் தற்போது கையிருப்பில் உள்ளமருந்து போதுமானதாக இல்லை எனவும் தெரியவருகிறது.

இம்மருந்து மூலம் ஒரு நோயாளியை பரிசோதனை செய்ய சுமார் 800 ரூபாய் வரை செலவாகிறது. இம் மருந்தை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு பெரும் செலவு ஏற்படும் எனக் கூறி கைவிரித்துள்ளது. (ரா)

# சிங்கள எல்லைப்புற கிராமங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள்

## அமைச்சர்கள், கட்சியினருக்கு பிரதமர் ரணில் உத்தரவு



(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட - கிழக்கு எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களுக்குத் துரிதமாக உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனியன்று எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களான மகாநிக்கவெவ, கெபிற்றிகொல்லாவ, மதவாச்சி பேமடுவ, இகிரிகொல்லாவ மற்றும் பல பகுதிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வுத்தரவை விடுத்தார்.

அதிகாரிகளுடன் இணைந்து எல்லைப்புறத்திலுள்ள சிங்களக் கிராமங்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணித்துள்ளார்.

நீர்ப்பாசனக் குளங்கள், வீதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை உடனமைத்துக் கொடுக்குமாறு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் உத்தரவிட்டார்.

அப்பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பும், நலனும் அரசாங்கத்தால் உறுதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது - பிரதமருடன் கலந்துரையாடிய சிங்கள மக்கள், கடந்த காலத்தைப் போலன்றி, தாம் தற்போது நிம்மதியாக உறங்கக் கூடியதாக இருப்பதாகவும், இரவிலும்கூட பயமின்றி நடமாடி வருவதாகவும் தெரிவித்ததுடன், அமைதியைக் கொண்டு வந்த அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

## தினமும் சுத்திகரிக்கப்படும் குடிநீர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் விநியோகிக்கப்படும் குடிநீரில் தினமும் குளோரின் இடப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக பரவிவரும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே குடிநீர் தாங்கியினுள் குளோரின் இடப்பட்டு வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன (ரா)

# மாநகரசபை பதவிக்காலம் முடிந்ததும் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்!

## ஜனாதிபதி, பிரதமரிடம் கேட்கிறார் யாழ். மேயர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னர் அவற்றை விசேட ஆணையாளரிடம் கையளிக்காமல் உடனடியாகத் தேர்தல் ஒன்றை நடாத்துமாறு கோரி யாழ்.மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன் பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னர் ஆணையாளர் ஒருவரை நியமித்து அவரிடம் உள்ளூராட்சிச் சபைகளைக் கொடுக்கவுள்ளதாகத் தெரியவந்ததையடுத்ததே மேற்படி கடிதத்தை அண்மையில் யாழ்.முதல்வர்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா, உள்துறை அமைச்சர் மற்றும் சில அமைச்சர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தை யாழ்.மாநகரசபையின் தீர்மானத்தின்படியே அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லி)

# லங்கா சமசமாசக் கட்சியிடம் மன்னிப்புக் கோரிய ஹரிம் பீரிஸ்

(கொழும்பு)

ஜே.வி.பி.யுடன் ஒப்பிட்டுப் பேசியமைக்காக லங்கா சமசமாசக் கட்சியிடம் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் மன்னிப்புக் கோரியுள்ளார்.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் ஜே.வி.பி.யிடம் தமது நிலையை இழந்துவிட்டன என்று ஹரிம் பீரிஸ் ஒப்பிட்டுப் பேசியிருந்தார். இதற்கு லங்கா சமசமாசக் கட்சி விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தது.

இதையடுத்தே, ஹரிம் பீரிஸ் லங்கா சமசமாசக் கட்சியிடம் மன்னிப்புக் கோரினார். ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவையடுத்தே இவர் மன்னிப்புக் கோரியதாகத் தெரியவருகிறது.

# பல்கலையில் இந்த ஆண்டு முதல் தொல்லியல் சிறப்பு கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்த வருடம் முதல் தொல்லியல் சிறப்புப் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு பல்கலைக்கழக மூதவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வகையில் 1974 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகம் வளாகமாக ஆரம்பித்தது தொடக்கம் ‘தொல்லியல்’’ என்ற பாடத்தை சிறப்புப் பாடமாக அமுல்படுத்த பல முயற்சிகள் பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டும் கைகூடவில்லை.

ஆனால், இந்த ஆண்டுமுதல் தொல்லியல் சிறப்புப் பாடமாக மாணவர்கள் கற்பதற்கு மூதவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிங்கள மாணவர்களுக்கு சிங்கள மொழியில், தொல்லியல் கற்கையை மேற்கொள்ள ஏற்கனவே வாய்ப்புகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் முதல் தமிழ் மாணவர்களுக்கும் இப்பாட நெறியைக் கற்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நீண்டகால முயற்சிகளுக்குப் பின்னர், தொல்லியல் பாடத்தை பல்கலைக்கழகத்தில் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் தமிழர்களின் வரலாற்றை தொல்லியல் ஆய்வுகளின் மூலம் கற்பதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

(62)

# அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் யாழில் தாக்கலாக வழி வேண்டும்

## நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளை யாழ்ப்பாணத்திலேயே தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாறான வழக்குகள் தாக்கல் செய்யவேண்டிய தேவை இருப்போர் கொழும்பு உயர் நீதிமன்றுக்குச் சென்றே வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியநிலையில் உள்ளனர்.

இதனால் பலர் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியாது பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமையை நீக்குவதற்காக அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளை யாழ். நீதிமன்றங்களிலேயே தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிடம் யாழ். நீதிமன்ற அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க,ச)

## துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி- தீப்பொறிப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சுட்டுச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே அப்பொதுமகன் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு வருக்குமிடையில் இடம்பெற்ற கருத்துமுரண்பாடு காரணமாகவே இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அப்துல் முகமட் ரஜீத் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனர்வாழ்வு, புனரமைப்பு உபகுழு இம்முறை திருமலையில் கூடும்!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு - புனரமைப்பு மனிதாபிமானப் பணிகள் தொடர்பான உபகுழுவின் கூட்டம் அடுத்த முறை திருகோணமலையில் நடத்தப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புனர்வாழ்வு - புனரமைப்பு மனிதாபிமான உபகுழுவின் கூட்டங்கள் இதுவரை கிளிநொச்சியிலேயே நடத்தப்பட்டன. இம்முறை கூட்டத்தை திருகோணமலையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும்.

இக்கூட்டத்தில் அரசதரப்புக்குத் தலைமைதாங்கும் பேணாட் குணதிலகவும், புலிகள் தரப்புக்குழுவுக்குத் தலைமையேற்கும் சு.ப.தமிழ்ச் செல்வனும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ்,

இக்கூட்டத்தில் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் இனங்காணப் படவுள்ளதுடன், எந்தெந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதென்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் கட்டுரை, வினாவிடைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் கட்டுரைப் போட்டியும், வினாவிடைப் போட்டியும் இம்மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் அனைவரையும் இப்போட்டியில் பங்குபற்றி, அரிய பரிசில்களைப் பெறுவதுடன், திறமையினையும் வளர்க்குமாறு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான விபரங்களைப் பெற யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிச் செயலாளர் பேராசிரியர் நா.ஞானகுமாரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் :சி.பூங்கதிர்
முகவரி: 2ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

இரண்டாவது அகவையில்

பெயர் :செ.சாயிகீர்த்தன்
முகவரி: ஓடக்கரை,
பருத்தித்துறை.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

----------------------------
பெற்றார் ஒப்பம்

## புலிகளுடன் இணைந்த மூன்று சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்துகொண்ட மூன்று சிறுமிகள் அவர்களது பெற்றோரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வானது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## தொழிலாளர் கற்கைநெறி மாணவர் சங்கக் கூட்டம்

தொழிலாளர் கற்கைநெறி டிப்ளோமா மாணவர் சங்கக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கற்கை நெறியில் படித்த அனைத்து மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாணவர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வதிரி கனகசிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வியாழக் கிழமை தொடங்கித் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

## மாநகரசபை உறுப்பினர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் வெற்றிடமாகவுள்ள உறுப்பினர் பதவிக்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

யாழ்.மாநகரசபையில் மேயராக இருந்த ரவிராஜ், நாடாளுமன்ற உறுபபினராகச் சென்றதிலிருந்து மாநகரசபையில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடமாகவிருந்தது.

அவ்விடத்தை நிரப்பவே தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கனகரத்தினம் சச்சிதானந்தசிவம் நியமிக்கப்படுகிறார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி மாநகர சபையின் பதவிக்காலம் முடிவடைவது குறிப்பிடத்தக்கது.

(ரா)

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 9

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

*இரத்தப் பரிசோதனைகள்*

(1) **உபவாச இரத்தப் பரிசோதனை**

**(FASTING BLOOD SUGAR TEST)**

12 மணித்தியாலங்கள் எந்த உணவையும் அருந்தாமல் உபவாசம் இருந்தபின், நாளத்திலிருந்து குருதியை எடுத்துப் பரிசோதித்து உணவுண்ணாவேளையில் இரத்தத்தில் இருக்கும் குளுக்கோஸின் (FBS) அளவு துணியப்படும்.

(2) **உணவின்பின் இரத்தப் பரிசோதனை**

**(POST PRRANDIAL BLOOD SUGAR TEST)**

சாதாரணமாக உண்ணும் உணவை உண்டு, இரண்டு மணித்தியாலங்களின்பின் நாளத்திலிருந்து குருதியை எடுத்துப் பரிசோதித்து உணவின்பின் இரத்தத்தில் இருக்கும் குளுக்கோஸின் (PPBS) அளவு அளக்கப்படும்.

(3) **குளுக்கோஸ் தாங்குதிறன் பரிசோதனை**

**(ORAL GLUCOSE TOLERENCE TEST)**

தொடர்ச்சியாக மூன்று நாட்கள் கட்டுப்பாடு எதுவுமின்றிக் காபோவைதரேற் உணவுகளை உண்டபின், நான்காவது நாள் 12 மணித்தியாலய உபவாசம் இருந்தபின் ஒரு தடவையும், அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவையுமாக - 5 தடவை இரத்தம் எடுக்கப்பட்டு அவற்றில் இருக்கும் குளுக்கோஸின் அளவு கணிக்கப்படும். இந்தப் பரிசோதனை மூலம் நீரிழிவு நோயாளியை இனங்காண்பதுடன் நீரிழிவுநோய் ஏற்படக்கூடிய (IMPAIRED) நிலையில் ஒருவர் இருக்கிறார் என்பதையும் கண்டு பிடிக்கலாம்.

(4) **Hb-AIC பரிசோதனை**

**(GLYCOSYLATED HAEMOGLOBIN)**

ஒருவர் நீரிழிவு நோயாளியென உறுதிப்படுத்தப்பட்டபின் Hb-AIC பரிசோதனை அவ்வப்போது செய்யப்பட்டு, அவருக்குப் பொருத்தமான மருந்துகள் வழங்கப்படும். இது ஒரு சிறந்த பரிசோதனை ஆகும்.

இரத்தப் பரிசோதனைக்கு இரத்தம் எடுக்கப்படும் வேளையில் - ஒருவர் வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்களினால் நீர்வற்றல் (DEHYDRATION) நிலையில் இருப்பாராயின் இரத்தப் பரிசோதனை முடிவுகள் நம்பகத்தன்மை குறைவானதாக இருக்கும். எனவே, இத்தகைய நிலைமைகள் இல்லாத வேளைகளில் இரத்தப் பரிசோதனை செய்வது சாலச் சிறந்தது.

**குளுக்கோ மீற்றர் பயன்படுத்திச் செய்யப்படும் இரத்தப் பரிசோதனை**

நாளக்குருதியில் பரிசோதனை செய்வதற்கு மருத்துவ ஆய்வுகூடங்களுக்குச் செல்லவேண்டும். இன்றைய செயல்விரைவு கொண்ட உலகத்தில் (HECTIC WORLD) இதற்கு நேரத்தைச் செலவிடுவது கடினமாக இருப்பதால் இலகுவாகவும், துரிதமாகவும் குருதிமயிர்க்குழாயிலிருந்து இரத்தத்தை எடுத்துப் பரிசோதிக்கப்படுகிறது. வீட்டிலேயே பரிசோதனை செய்யத்தக்க குளுக்கோ மீற்றர் கருவிகள் விற்கப்படுகின்றன. ஒவ்வொரு கம்பனியும் தாம் தயாரிக்கும் குளுக்கோ மீற்றரில் பயன்படுத்துவதற்கென ஒவ்வொருவகையான இரத்தத்துளிக் கீலங்களை விற்பனை செய்கின்றன.

*தொடரும்..*



## நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **RATNAGOPALS - இரத்தின கோபால்ஸ்**

[இணைந்த நிறுவனங்கள்]

63, 65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான
ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!



## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------------------------------
வயது: ----------------------------------------
முகவரி: ----------------------------------------
----------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# எந்த நேரத்திலும்



# உறக்கம் கலையலாம்





தென் அமெரிக்காவில் தற்போது "உறங்கியிருக்கும்" நான்கு எரிமலைகள் எந்நேரமும் வெடிக்கக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். செய்மதிப்படங்கள் மூலம் இந்த எரிமலைகள் எந்நேரமும் குமுறக்கூடிய நிலை உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிலியில் உள்ள அன்டீஸ் மலைத் தொடரில் உள்ள 900 எரிமலைகள் செய்மதிகளால் படம் பிடிக்கப்பட்ட போது இந்த நான்கு எரிமலைகளே வெடிக்கும் சாத்தியம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை- பூமியின் உட்பரப்பில் குமிறிக்கொண்டிருக்கும் எரிமலைகள் வெடிக்காமலேயே சாந்தமாகிவிடும் வாய்ப்பும் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# குளோனிங் சிறுத்தை



சிறுத்தைகளை குளோனிங் முறையில் உற்பத்தி செய்ய இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஈரானின் உதவியைக் கோரியுள்ளனர். தமது இத் திட்டத்திற்கு நிதி மூலமாகவோ அல்லது குளோனிங்கிற்காகச் சிறுத்தைப் புலியின் சில கலங்களை தந்துதவியோ- ஈரான் உதவலாம் என ஹைதராபாத்தில் உள்ள கல உயிரியல் நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவின் இக்கோரிக்கை ஈரானிய ஜனாதிபதி கதாமி அண்மையில் புதுடெல்கி வந்திருந்தபோது விடுக்


# இந்தியா கேட்கின்றது

கப்பட்டது.

50 வருடங்களுக்கு முன் சிறுத்தையினம் (Cheetah) இந்தியாவிலிருந்து அழிந்து போய்விட்டமை குறிப்பிடத்தக்கது.

# யானையுடன் தலைமறைவு

தனது சேர்க்கஸ் யானையுடன் தலைமறைவாகிவிட்ட சேர்க்கஸ் நிறுவன முகாமையாளரை வலைவிரித்துத் தேடி வருகின்றனர் ஜேர்மனியப் பொலிஸார். யானைகளைக் கொடுமைப்படுத்தி சேர்க்கஸ் நிகழ்வுகளை நடத்தி வருவதாக இவர் மீது குற்றஞ்சாட்டிய அதிகாரிகள், இவரின் யானைகளைப் பராமரிக்கும் அனுமதியை ரத்துச் செய்ததைத் தொடர்ந்தே, இந்நபர் யானையுடன் தலைமறைவாகிவிட்டாராம். ஒருவாரமாகத் தேடியும் இவர் இன்னும் சிக்கவில்லை. அவர்தான் சிக்கவில்லை பிரமாண்டமான யானையை எப்படி ஒளித்து வைத்திருக்க முடியும்? எனத் தலையைப் பிய்த்துக் கொள்கின்றனர் பொலிஸார். இது எமக்குப் பெரிய சவால் என்கிறார் ஜேர்மன் பொலிஸ் பேச்சாளர்.




இந்தப் பெரிய உருவம் எப்படி மறைந்தது...?




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்



அங்கம் - 18

லொஸ் ஏஞ்சல்ஸ் வந்தவுடன் ஃபெர்ஸ்ட் நஷனல் படக்கம்பெனியின் ஒப்பந்தப்படி, அவர்களுடைய கடைசிப் படங்களை முடித்துக்கொடுக்கும் வேலையில் ஈடுபட்டார் சார்லி. அந்த ஸ்ருடியோ அவருக்கு நிறையத் தொல்லைகளை கொடுத்தது. ஒரு கட்டத்தில் பத்து மில்லியன் டொலர்கள் நஷ்டஈடு கோரி அவர்களுடன் வழக்காட நினைத்தார். ஆனால் அவருக்கு அவர்களிடமிருந்து விடுதலை பெற்றால்போதுமென்றிருந்தது.

'த பில்கிரிம்' படத்தை முடித்த பிறகு, யுனைடெட் ஆர்டிஸ்டுக்காக சார்லியால் படம் தயாரிக்க முடிந்தது. புதுப்படம் அவருடைய எழுபத்தியிரண்டாவது படமாக இருந்தது. அதில் அவர் ஒரு சிறிய வேடத்திலேயே தோன்றியதால், மக்கள் குழம்பிப் போனார்கள். ஆனால் அடுத்த படத்திலேயே மறுபடியும் அவர்களுக்கு நாடோடியை எப்போதுமில்லாத கற்பனைத் திறத்துடன் கொடுத்தார். மீண்டும் ஒரு அசாதாரண கருவையே முன்னோடியாக எடுத்துக் கொண்டார். மீண்டும் ஒரு பெரிய சமூக அநீதியை சமாளிக்க தன்னுடைய அபார நகைச்சுவைத் திறனை அர்ப்பணித்தார். க்ளோன்டைக்கில் தங்கம் சேகரிக்கப் பாடுபடும் அவதிகளை அவர் அவ்வப்போது படித்து வந்தார். 'த கோல்ட் ரஷ்' திரைப்படத்தை உருவாக்க முடிவு செய்தார். இது அவருடைய பிரபலமான படங்களுள் ஒன்றாகும்.

இதில் நகைச்சுவைக் காட்சிகள் நிறைந்திருந்தாலும் கூடவே சோகமும் இருந்தது. காதலிக்கும், அவள் தோழிகளுக்கும் விருந்து ஏற்பாடு செய்ய, சார்லி எண்ணிலடங்காத இன்னல்களைச் சந்திக்கிறார். விருந்துக்கு யாரும் வரவில்லை. இறுதியில் தன் காதலியைக் கைப்பிடிப்பதோடு தங்கத்தையும் கண்டுபிடிக்கிறார்.

இன்றைக்குள்ளது போல் மின்னணுக்காட்சி எதுவும் அப்போதிருக்கவில்லை. எல்லாமே பெரும் மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, புத்திசாலித்தனமான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, காமிரா ஷொட்கள் கணக்கெடுக்கப்பட்டு தேவையில்லாதவைகளை வெட்டி எறிவதன் மூலம்தான் சாத்தியமானது.

ஸ்ரூடியோவில் நிர்மாணிக்கப்பட்ட "மலைகளை" யும் "உறைபனிகளை"யும் உருவாக்க 2,39,577 அடிகள் மரங்களும், 22,750 அடிகள் காரைகளும், 285 டன்கள் உப்பும், 100 பேரல்கள் மாவும், நான்கு கைவண்டிகள் நிறைய ஒருவகை இனிப்புப் பதார்த்தமும் தேவைப்பட்டன. சார்லி வழக்கத்தை விட அதிகமான அடிகள் படமெடுத்தார். மொத்தம் 2,31,505 அடிகளை 8,555 அடிகளாகக் குறைத்தார்.

திரையில் சார்லியின் கதை சுபமாக முடிந்திருந்தாலும் நிஜவாழ்வில் வேறுவிதமாக இருந்தது.

1924, நவம்பரில் தன் படங்களில் கதாநாயகியாக நடித்த லிட்டாகிரேயை மணந்தார் சார்லி. இது முதல் திருமணத்தை விட மகிழ்ச்சிகரமானதாக இல்லை. அவர்களுக்கு சிட்னி, சார்லஸ் என்ற இரண்டு மகன்கள் பிறந்தார்கள். ஆனால் அவர்கள் மணவாழ்க்கையோ மோசத்திலிருந்து படுமோசமாகியது. 1926 இல் லிட்டா குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார். சார்லி இதிலிருந்து எளிதாக மீண்டாலும் அவருடைய வாழ்வில் இன்னொரு இருண்ட காலமாகத்தான் அது இருந்தது.

சொந்த வாழ்க்கையில் கொந்தளிப்புக்கள் ஏற்பட்டிருந்தாலும் சார்லி தொடர்ந்து 'த சேர்க்கஸ்' என்ற திரைப்படத்தை உருவாக்கினார். நிலைமை இன்னும் மோசமாகியது. 1927 செப்டெம்பரில் அவர் ஸ்ரூடியோவில் தீ பரவி, அரங்கமைப்புகளையெல்லாம் பாழ்படுத்திவிட்டது. இருந்தாலும் தமது பணியைத் தொடர்ந்தார்.

கயிற்றில் நடக்கக் கற்றுக்கொள்ள அவருக்க ஒரு வாரம் பிடித்தது. இது முடிந்த பிறகு ஏற்பட்ட நிம்மதிப் பெருமூச்சு விரைவிலேயே எரிச்சலாகவும் மாறியது. காரணம் அதுவரை எடுக்கப்பட்டு இருந்ததெல்லாம் மோசமான ஆய்வுகூட வேலையினால் நாசமாகிவிட மீண்டும் சார்லி கயிறு மேல் நடந்து எல்லாமே எடுக்க வேண்டியிருந்தது. இறுதியில், கயிற்றில் நடக்க வேண்டிய காட்சியை எழுநூறு டேக்கள் எடுத்துக்கொண்டார் சார்லி. இவ்வளவிற்கும் இது ஒரு சில நிமிடங்களே படத்தில் வரும்.

சிங்கத்தின் கூண்டில் அவர் இருந்த நேரம் இன்னும் அச்சுறுத்தலாக இருந்தது. அந்தச் சம்பவத்தை படமெடுக்க இருநூறு டேக்கள் தேவைப்பட்டன. படத்தில் அவர் முகத்தில் இருந்த பயம், வெறும் நடிப்பல்ல என்று சார்லி பிறகு கூறினார்.

லிட்டாவின் விவாகரத்துக்கும், ஒப்பந்தப்படி செலுத்தப்படவேண்டிய வரி பாக்கிக்கும் அவருக்கு உடனடியாக பணம் தேவைப்பட்டது. "த சேர்க்கஸ்" முடிந்த கையோடு அவர் 'சிற்றி லைட்ஸ்' படத்தைத் துவக்கினார்.

இந்தச் சமயத்தில், இன்னொரு அடி விழுந்தது. 1928 ஆகஸ்ட் 28 இல் அவர் தாய் இறந்தபோனாள். ஹன்னா மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும், முந்தைய தினம் அவளும் சார்லியும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்றைய இரவே கோமாவில் விழுந்தவள் இறப்பதற்கு முன் ஒரே ஒரு முறைதான் கண் விழித்தாள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# திரை விமர்சனம்

## அன்பே சிவம்



நீண்ட இடைவெளிக்குப்பின் ஓரளவு உன்னதமான ஒரு படைப்பு தமிழ் சினிமாவில் உருவாகியுள்ளது. கமலஹாசன் தனது நிகரற்ற நடிப்பாற்றலை இதில் வெளிப்படுத்தியிருக்கிறார். முக்கியமான இரு கதாபாத்திரங்களை வைத்தே (கமல்+ மாதவன்) திரைப்படத்தின் அரைப்பகுதியை நகர்த்திச் சென்றவிதம் அலாதியானது. இரண்டு வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட இரண்டு மனிதர்கள் எதிர்பாராத விதமாகச் சந்தித்து அவர்களது இரு வேறுபட்ட மனநிலைகள், நடத்தைகளைப் பார்வையாளர்களுக்கு பதிய வைப்பதற்காகக் கதையின் முன்பகுதியை நகர்த்திச் செல்கிறார் இயக்குநர் சி.சுந்தர். உளவியல் ரீதியில் பார்த்தால் Ego மற்றும் Super ego மனநிலைகள் கொண்ட இரு தனிநபர்களிடையே நடைபெறும் நேரடி உளப்போராட்டமாக கதை நகர்த்தப்படுகிறது.

கமலஹாசன் அனுபவமிக்க, எவற்றையும் சாதாரணமாகவே சமநிலையுடன் பார்க்கின்ற, வலது குறைந்த தோற்றமானவர். இவரைத் தற்செயலாகச் சந்திக்கும் மாதவன், விளம்பர நிறுவனங்களுக்கு விளம்பரப் படங்களை தயாரிக்கும் ஒரு இளைஞன். துடிப்பான, தன்னலமே கருதும் இளைஞர்களுக்கே உரித்தான மன நிலை கொண்டவராக வருகிறார். இந்த இருவருக்குமிடையிலான சந்திப்பு எவ்வாறு ஒருவரில் ஒருவரது எண்ணப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதே மிகுதிக் கதையாக விரிந்து செல்கிறது.

ஒரிஸாவிலிருந்து தமிழ்நாடுவரை ஒன்றாகப் பயணிக்கும் இருவரிடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றங்கள், இடையிடையே நடக்கும் கொடூர சம்பவங்கள், மாதவனின் மனநிலையில் படிப்படியாக ஏற்படும் மாற்றங்கள், இம்மாற்றங்களுக்கு மூலமாக அமையும் கமலின் நடவடிக்கைகள் என்று திரைக்கதை சலிப்பின்றி மெதுவாக நகர்வது இப்படியும் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க முடியும் என்று சாட்சி பகர்கின்றது.

பாடலாசிரியர் வித்தியாசாகரின் "யார் யார் சிவம்" என்ற பாடல் மனதில் பதியக்கூடியவாறு இருக்கின்றது. இப்பாடல் காட்சியின்போது படுகாயமுற்ற கமலைக் கிறிஸ்தவ கன்னியாஸ்திரி அன்பாகப் பராமரிக்கும் காட்சியும் "அன்பே என்றும் சிவமாகும்" என்ற பாடல் வரியின்போது அந்த வைத்தியசாலை வளாகத்தில் அன்பே வடிவான யேசுநாதரின் சிலையில் கமரா "குளோசப்" செல்வதும்- மதங்கள் அனைத்துமே அன்பைத்தான் வலியுறுத்துகின்றது என்ற தத்துவத்தை மிக தத்ரூபமாகக் காட்டுகிறது. படத்தின் மூலக்கருவான அன்பினால் எதையும் கூடச் சாதிக்கலாம் என்று தனது 'பளிச்' வசனங்களினால் நிறுவியிருக்கின்றார் பிரபல ஆனந்தவிகடன் காட்டூனிஸ்ட் மதன்.

நடிப்பில் தான் ஒரு மலை என்பதைக் கமலஹாசன் இத்திரைப்படத்தில் மீண்டும் நிரூபித்திருக்கிறார். அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட தனது முகத்தை வெட்டி இழுத்து, வாயை ஒரு கோணலாக வைத்துப் பேசுவதிலும், இன்பமோ, துன்பமோ வரும்போதெல்லாம் புன்னகை புரிந்தபடியே இருப்பதிலும், "உங்களால் இப்படி இருக்க எப்படி முடிகிறது"? என ஒரு கட்டத்தில் மாதவன் வியப்போடு கேட்க, புன்னகை மாறாமல் 'நான் கடவுள்' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லும்போதும், ஒரு பக்குவப்பட்ட மனிதன் இப்படித்தான் இருப்பான் என்ற தோற்றப்பாட்டை எம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார் கமல். மாதவனும் தனது முழுத் திறமையை வெளிப்படுத்திக் கமலுக்கு நிகராக இத்திரைப்படத்தில் நடித்திருப்பது பாராட்டத்தக்கது.

"தென்னாடுடைய சிவனே போற்றி" என்று அடிக்கடி உச்சரித்துக்கொண்டு, தொழிலாளிகளைச் சுரண்டி வாழும் முதலாளியாக நடிக்கும் நாஸர், இத்திரைப்படத்தின் மூன்றாவது நட்சத்திரமாகக் கொள்ளலாம்.

தொழிலாளர் அவலத்தை தெருக்கூத்தாக நடத்திக்காட்டும் அந்தக் காட்சிநேரம் நீடிப்பதே இத்திரைப்படத்தின் 'மைனஸ்'. இது பார்வையாளர்களை அலுப்புத்தட்ட வைக்கும் ஒரு கட்டமாகும். இதை நீக்கிவிட்டுப் பார்த்தால் அன்பே சிவம் ஒரு ஒரு தரமான படைப்பு என்று துணிந்து கூறலாம். எனினும் தற்போது அதிகமாக வரும் யதார்த்தமற்ற கதையம்சங்களைக் கொண்ட திரைப்படங்களை "ஆஹா...ஓஹோ" என்று ரசிப்பவர்களுக்கு அன்பே சிவம் திரைப்படம் "சீ... என்ன படம் இது!" என்றுதான் தெரியும்.

-துஷி

# ஆடுகள் ஆண்டு





சீனர்கள் இந்த ஆண்டை ஆடுகள் ஆண்டாகப் பிரகடனம் செய்து தமது வழமையான பாரம்பரியக் கலை நிகழ்வுகளை நடாத்துகின்றனர்

AP





# வாரம் ஒரு யோகாசனம்

## பத்மாசனம்



பத்மாசனம் செய்யும் விதம் சமமான தரையில் நீளமான விரிப்பை விரித்து அதிலிருந்து கால்களை நீட்டி வலது காலை மடக்கி இடது தொடையின் மேல் குதிகாகல் அடி வயிற்றில் படவைக்க வேண்டும். இடது காலை மடக்கி வலது தொடையில் மேல் வைத்து நிமிர்ந்து இருக்க வேண்டும். ஆசனம் செய்யும் போது மூச்சை உள்ளிழுக்கும்போதும் ஓம் என்றும், வெளியில் சுவாசம் விடும்போது ஒன்று என்றும் கணக்குப் போட்டு 15 தடவை எண்ண வேண்டும். ஒரு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை இருந்தால் போதுமானது.

## பத்மாசனத்தின் நன்மைகள்

சுவாசப்பையை நேராக இருக்கவைக்கின்றது. அதிகமான பிராண வாயுவை உள்ளே இருக்க இடம் எடுக்கின்றது. முதுகெலும்பு வலுப்பெறுகின்றது. இரத்த நரம்புகள் துரிதமாக வேலை செய்கின்றன. நல்ல ஞாபக சக்தியை ஏற்படுத்துகின்றது. இதைத் தொடர்ந்து செய்வதனால் ஆயுள் அதிகரிக்கிறது.

கற்றுத்தருபவர்
மா.மகாநேசன் (கரவெட்டி)

# உங்கள் வாழ்வின் திசை உங்களிடமே

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தன்னம்பிக்கை மனமுதிர்ச்சி பெற்றவரில் இருக்கும். என்னிடம் வல்லமை, திறமையுண்டு. என்னால் எனது பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியும் என எண்ணுவார். முடியாத நிலையை அளவுக்கு அதிகமாக எண்ணுவதில்லை. பிரச்சினையின் முன்னிலையில் அதைச் சவாலாக எடுக்காது முகம் கொடுக்க முடியாதிருந்தால் மனமுதிர்வு இல்லை எனலாம்.

மனமுதிர்ச்சி அடைந்த ஒருவர் வெளிநிலையில் நின்று தீர்மானம் எடுக்க மாட்டார். இது நன்மை என்று நன்றாகத் தெரிந்தாலேயே தீர்மானம் எடுப்பார்.

அதேபோன்று மனமுதிர்ச்சி பெற்றவர் தனது வாழ்வின் சுக்கானை மற்றவரிடம் கொடுப்பதில்லை. வீட்டில் காரியாலயத்தில் இருவர் ஏதாவது கூறினால் கலவரப்பட்டு செயற்படும்போது எனது சுக்கானை மற்றவரிடம் கொடுத்து விட்டேன் என்பது அர்த்தம். கடைக்குச் சென்றதும் எனக்கு விருப்பமான விதத்தில் உடுப்பெடுக்காது கடைக்காரன் அழகானது என்று கூறியதால் எடுத்து வந்தால், எனது சுக்கானை அவரிடம் கொடுத்து விட்டேன் என்பது அர்த்தம்.

மற்றவரோடு உறவை ஏற்படுத்தத் தெரிந்தவராக மனமுதிர்ச்சி பெற்றவர் இருப்பார். மற்றவரை ஒரு பொருளாகப் பாவித்துத் தனது குறிக்கோளை நிறைவேற்ற, மற்றவர் ஓர் உதவி என்று நினைக்க மாட்டார். சந்தர்ப்பத்துக்கேற்ப விட்டுக் கொடுத்து ஈய்ந்து கொடுக்கக் கூடியவராக இருப்பார். சந்தர்ப்பத்துக்கேற்ப தன்னை மாற்றி, மற்றவரை ஏமாற்றாது தனது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தக் கூடியவராக இருப்பார்.

மற்றவர்கள் அவரை நம்பும் விதத்தில் மனமுதிர்ச்சி பெற்றவர் நடமாடுவார். யதார்த்தத்துக்கேற்ப விசுவாசத்துடன் எந்த நேரத்துக்கேற்பவும் செயற்படக் கூடியவராக இருப்பார்.

சிலர் எந்நேரமும் கலக்கத்திலே இருப்பர். குடும்பத்தில், காரியாலயத்தில் மற்றவர்கள் எதிர்பார்ப்பதை என்னால் நிறைவேற்ற முடியவில்லையே என்று கலங்கியவாறு இருப்பர்.



முடியாது என்று கூற முடியாதவர்களாக இருப்பர். ஆனால் - முடிந்தால் ஆம் என்றும், முடியாவிட்டால் முடியாது என்றும் கூறக் கூடியவராக மனமுதிர்ச்சியடைந்தவர் இருப்பார்.

அன்றாடம் எமது வாழ்வின் செயல்களில் சமநிலை இருக்க வேண்டும். உண்பது, குடிப்பது, தூங்குவது போன்றவற்றில் சந்தோசத்தை அனுபவிக்க வேண்டும். ஆனால் அளவுக்கதிகமாக உண்பது, தூங்குவது மனமுதிர்ச்சியைக் காட்டாது. எதையாவது செய்ததும் எந்நேரமும் குற்ற உணர்வு இருந்தால் அவர் மனமுதிர்ச்சி பெறவில்லை எனலாம்.

தன்னைப் பற்றிய சுய அறிவு மனமுதிர்ச்சி பெற்றவரிடம் உண்டு. தனது திறமை, தனது முடியாத தன்மை பற்றியும் தனது உடல்நிலை பற்றியும் அறிவு இருக்கும்.

பொறுப்பைப் பாரமெடுக்கும் திறமை மனமுதிர்ச்சி பெற்றவரிடம் உண்டு. "என்ன செய்ய எப்படியாவது இழுத்துச் சுமக்கத்தானே வேண்டும்" என்ற மனநிலை மன முதிர்ச்சியைக் காட்டவில்லை.

தனது ஆளுமையின் ஒரு பகுதியாக தனது மனச்சாட்சி மனமுதிர்ச்சி பெற்றவரில் இருக்கும். சிலரது மனச்சாட்சி எப்போதும் வெளியில் இருக்கும். அதாவது மற்றவர் கூறியதும் கலங்குவர்.

மனமுதிர்ச்சியடைந்தவர் தனக்காக மட்டுமன்றித் தனது குடும்பத்துக்காக மட்டுமன்றி மற்றவர்களுக்காகவும் வாழ முயலுவர்.

எமது வாழ்வு பெறுமதி வாய்ந்தது. வாழும் அளவுக்கு அதன் பெறுமதி கூடுகிறது. இதனை நாமே உருவாக்க வேண்டும். நாம் நன்றாக வாழ விரும்ப வேண்டும். வாழ்வு பெறுமதி வாய்ந்தது என்று வாழ்கிறோமா? அல்லது ஏனோ தானோ என்று வாழ்கிறோமா? மனமுதிர்ச்சி பெற்றவர் வாழ்வை வாழவே விரும்புவார். *(அடுத்த வாரம் தொடரும்)*

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
கொலைமேற்கொண் டாரின் கொடிதே
-அலைமேற்கொண்டு
அல்லவை செய்துஒழுகும் வேந்து.

## நமது நோக்கு

### யாருக்குச் சுதந்திரம்...?

இன்று, இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்ததைக் கொண்டாடும் நாள். இன்றுடன் 55 ஆண்டுகளாக இலங்கை சுதந்திரமடைந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும் - இத்தீவில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த 55 ஆண்டுகளும் - இனரீதியான ஒடுக்குமுறையின் நினைவு ஆண்டுகளாகவே கணிக்கப்படுகின்றன.

1948 இலிருந்து தமிழர்கள் மீது அடாவடித்தனத்தையும், இன ஒழிப்பையும் வகை தொகையின்றிக் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள அரசாங்கங்கள் - தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கிக் கொடுமைப்படுத்தினரே தவிர, தமிழினமும் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருந்து வெகுதொலைவிலேயே தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.

தமிழர்களுக்கான சம உரிமைகளைக் கொடுப்பதற்கு மட்டுமல்ல, இருக்கின்ற அடிப்படை உரிமைகளையும் பறித்து விட்ட வரலாறே இலங்கையின் சுதந்திர வரலாறாக இருக்கிறது.

1948 இல் இந்திய வம்சாவழித் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமான இத்துன்ப வரலாறு - இன்னும் தொடர்கதையாகி வருகின்றது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவந்ததன் மூலம் - தமிழ் மக்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டது. சிங்கள மொழியின் மேலாதிக்கம் - தமிழ் மக்களின் மீது திணிக்கப்பட்டது.

1957 இல் தமிழர் தந்தை செல்வநாயகமும், எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் செய்துகொண்ட உடன்படிக்கை, குறுகிய பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் தூண்டுதலால் கிழித்தெறியப்பட்டது. தமிழர்களுக்கான ஆட்சியுரிமை பகிரங்கமாகவே மறுக்கப்பட்டது.

1958 இல் தமிழர்களின் இரத்தம் குடித்த சிங்கள மிலேச்சத்தனம் - தமிழனாய்ப் பிறந்த குற்றத்திற்காக கைக்குழந்தையையும் கொதிக்கும் தாரில் போட்டுக் கொன்றது. கண்ணுக்கு முன்னே உறவுகள் வெட்டியும், குத்துப்பட்டும் படுகொலையாகத் துடித்த நெஞ்சங்களின் அலறல்கள் விண்ணை முட்டியது.

1965 களில் டட்லி - செல்வா உடன்படிக்கைக்கும் - தெற்கில் எழுந்த ஆதிக்கச் சிந்தனைகள் அழிவையே தேடித்தந்தன.

1972 இல் - பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்து - தமிழ் மாணவர்களின் கல்விக்குக் குழிபறிக்கப்பட்டது.

உயர் புள்ளிகளைப் பெற்றும், தமது பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த தமிழ் மாணவர்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கவும் அதுவே அடிப்படையாகியது.

தமிழ் வளர்த்தோம், தமிழால் வளர்ந்தோம் எனப் பெருமை கொண்டாடி, யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு, திட்டமிட்டுக் குழப்பப்பட்டு, தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் களமானது.

1977 களில் மீண்டும் ஒருமுறை தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதம் பாய்ந்து இரத்தம் குடித்தது.

தேயிலைச் செடிகளின் பசுமைக்கு தம் இரத்தம் சிந்தியே உரமாகிப்போன மலையகத் தமிழர்கள் பலர் கொன்றொழிக்கப்பட்டனர்.

1981 இல் - தமிழ் மக்களின் கருவூலமாகத் திகழ்ந்த, தென்னாசியாவின் மிகப்பெரும் நூலகமாகத் திகழ்ந்த - யாழ்.நூலகம் - காட்டுமிராண்டித்தனமாகத் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

அங்கு கருகியது நூல்கள் மட்டுமல்ல, தமிழர்களின் இதயமும்தான் என்பதை சிங்களப் பேரினவாதம் எக்காளமிட்டுக் கொண்டாடியது.

1983 கறுப்பு ஜூலையில் நாடு முழுவதும், எங்கெங்கு காணினும் தமிழர் உடல்கள் எரியும் நாற்றமே காற்றை நிரப்பியது. வடக்கில் சிங்களப் படையினர் கொலை வெறியுடனும், தெற்கில் சிங்களக் காடையர்கள் அரசியல் ஆசீர்வாதத்துடனும் தமிழர்களைக் கொன்றொழிப்போம் என இரத்த வேட்டையே நடாத்தினர். நாட்டின் தலைவரே நாசகாரிகளைத் தூண்டினாரென்றால் - நடப்பது என்னவாயிருக்கும்?

வெட்ட வெட்டத் தழைப்பவர்களாக எழும் தமிழர்களை வேரறுக்க, சமயம் பார்த்திருந்த சிங்களக் காடையர் கும்பல்கள் - தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடின. திருட முடியாதவற்றைத் தீக்கு இரையாக்கின. கொளுந்து விட்டெரிந்த இலங்கையில், தமிழர்களின் சுதந்திரம் காணாப் பொருளானது.

இவ்வளவுக்கும் பின்னர் - இனிப் படை நடத்தியே தமிழர்களை அழிப்போமெனத் திரண்டுவந்த சிங்களப் படைகள், ஆண்டுகள் இருபதாய் நடாத்திய அட்டூழியமும் அழிவும் மறக்க முடியுமோ, மன்னிக்கத் தகுந்ததோ...?

இதன் பின்னரும் - அமைதிக்காகக் கைகொடுத்திருப்பவர் தமிழரென்றால், அவர்தம் பெருந்தன்மையை சிங்கள தேசம் புரிந்துகொண்டதா என்பது இன்னும் கேள்விக்குறியாகவுள்ளது.

கௌரவமான சமாதானத்தினை, சக வாழ்வினைத் தேடி நிற்கின்றபோதும் - உயர்பாதுகாப்பு வலயமென்றும், தடைகளென்றும், கெடுபிடிகளுமாக - காணாமற்போன சுதந்திரம் இன்னும் கடைகெட்டே கிடக்கிறது...?

அழுத்தங்கள் களைந்து, தமிழருக்கான உரிமைகள் தந்து, தம்மைத்தாமே ஆளும் சுயாட்சியுமளிக்கும் நாளே எமக்கான சுதந்திரநாள் என்ற உறுதியில் - இன்றைய நாளும் எமக்குக் கறுப்புநாள்தான் என்றே உரத்துச் சொல்கிறோம்.

# ஆனையிறவுக் கடனீரேரியில் பாதிக்கப்படும் இறால் பிடிப்பு!

## கண்ணிவெடிகளும் பொறித்தடிகளும் மீனவருக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுக் கடனீரேரிப் பகுதியில் இறால் பிடிப்பதற்கு, அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளும் பொறி ஆயுதங்களும் தடையாக இருந்து வருகின்றன.

இப்பகுதியில் மிகத்தரமான இறால் வளர்வதற்கேற்ற சூழல் நிலவுகின்றது. இதனால் பெருமளவில் இறாலும் இப்பகுதியில் செறிந்துள்ளது. ஆனாலும், ஆனையிறவில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தபோது கடனீரேரியெங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்திருந்தனர்.

அத்தோடு மிகக் கூராகத் தீட்டப்பட்ட தடிகளையும் நிலத்தில் அடர்த்தியாகப் புதைத்து வைத்துள்ளனர்.

முன்பு வியட்னாம் யுத்தத்தில் அமெரிக்கப் படையினரின் நுழைவைத் தடுக்க, இவ்விதமே வியட்னாமியப் போராளிகள் மூங்கில்களைக் கூராக்கி நிலத்தில் புதைத்திருந்தனர்.

அதனையொத்த வகையில் ஆனையிறவிலும் ராணுவத்தினர் தடிகளைப் புதைத்துள்ளனர்.

இதனால், மீனவர்கள் கடனீரேரிக்குள் இறங்குவதற்கு அச்சமடைந்துள்ளனர். ஆனையிறவு, தட்டுவன் கொட்டி, உப்பாறு, உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் வாழும் மீனவர்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

# அரசமரம் இருக்குமிடமெல்லாம் விகாரை; அச்சமும் அவநம்பிக்கையும் தருகிறது!

## வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும், ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இடையில் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட முக்கியமான விடயமான, மக்களின் இயல்பு வாழ்க்கை என்ற விடயம் எமது பிரதேசத்தில் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி அடிப்படை வசதிகளற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், அவர்களின் மனதில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தும் முகமாக கந்தரோடைப் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நிலையக் காணியில் ஒரு புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் உண்மையில் யாருக்கு எந்த மதத்தினைச் சார்ந்தவர்களுக்குச் சொந்தம் என ஆராய்ச்சி முடிவு எட்டப்பட முன்னர் இப்படியான விகாரை ஒன்றினை புதிதாக அமைத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மட்டுமல்ல, ஸ்ரீலங்காவின் நிர்வாகத்தை அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது என வலி.தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஒரு பிரதேசத்தில் ஒரு கோவிலோ விகாரையோ (வழிபாட்டுத்தலம்) அமைப்பதாக இருந்தால், அப்பகுதி பிரதேச செயலரிடமோ அன்றி அரச அதிபரிடமோ அனுமதி பெறவேண்டும்.

இந்த விகாரை அமைக்கும் விடயத்தில் அதுகூடக் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதோடு, இதேபோன்ற பல விகாரைகள் யாழ்.குடாநாட்டின் பல கிராமங்களில் புதிதுபுதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. அரசமரம் நிற்கும் இடமெல்லாம் புத்தரின் சிலை வைக்கப்பட்டு வழிபாட்டுத் தலமாக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து வடபகுதி நோக்கி வரும் சிங்கள மக்கள் இவ்விகாரைக்குச் சென்று வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

நாங்கள் புத்தமதத்திற்கு விரோதிகள் அல்லர். யாழ்ப்பாணத்தில் புத்தவிகாரையும் நயினாதீவில் நாகவிகாரையும் அமைந்துள்ளது. அது தொடர்பாக நாம் எந்த விதமான பிழையான கருத்துக்களையும் கூறவும் இல்லை, கூறப்போவதுமில்லை. ஆனால், அரச மரம் நிற்கும் இடமெல்லாம் புத்தபகவான் இருந்த இடமென்று அங்கே அவரின் சிலையை வைத்து அதனைக் காலங்காலமாக உள்ள வழிபாட்டுத் தலமாகக் காட்ட முனைவதுதான் எம்மையும் எம்சமயத்தையும் அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

இதுமட்டுமல்ல, அதன் அருகில் இராணுவ முகாமை அமைத்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான நடவடிக்கையாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக எமது மக்கள் மனதில் அரசின் மீது அவநம்பிக்கையும் அச்சம் கலந்து பயஉணர்வும் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

## பின்தங்கிய பிரதேசங்களில் விசேட மருத்துவ முகாம்கள்

(புலோலி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் விசேட வைத்திய முகாம்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

சுகாதார வசதிகள் குறைந்த இடங்கள் இனங்காணப்பட்டு அந்தப்பகுதிகளிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இடுவதுடன் நோய்த்தடுப்பு முறைகள் பற்றியும், சுகாதார அதிகாரிகள் ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி மருந்து வழங்கப்படுவதுடன், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷாவும் இம்முகாம்களில் வழங்கப்படுகின்றது. அத்துடன், விசேட வைத்திய சேவையையும் மக்கள் பெற்று வருகின்றனர் .

(ச,15)

## ஊனமுற்ற மாணவர்களின் கல்வி விருத்திக்கு லியோ கழகம் உதவி

வடக்கில் - வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஊனமுற்ற மாணவர்களின் கல்வி விருத்திக்காக மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினால் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் பிறப்பால் மற்றும் யுத்த அனர்த்தத்தால் ஊனமுற்ற மாணவர்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் பயன்பெற விரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் தமது சுய விபரங்களையும் எழுதி - தலைவர், மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம், லயன்ஸ் கழகம், யாழ்.வீதி, மானிப்பாய் எனும் முகவரிக்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

# இலங்கையர் எல்லோருக்கும் உடன் நடக்க வேண்டும் என்ற நோய்

## சொல்கிறார் அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

இலங்கையில் பலர், எல்லாம் உடனேயே நடந்து விடவேண்டும் என்ற நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்களில் உடனடியான தீர்வுகள் கிடைக்க வேண்டும் எனப் பலர் எண்ணுகிறார்கள். 20 வருடமாக நீடித்த யுத்தத்திற்கு ஒருசில நாட்களில் தீர்வுகாணபது சாத்தியமானதா என்பதை எவரும் சிந்திப்பதில்லை.

சமாதானத்தீர்வு காண்பதற்கு நீணட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அமைதியைக் காப்பதற்காக நாம் யுத்தத்திற்கும் தயார்படுத்தி வருகின்றோம்.

20 வருடகால யுத்தத்துக்கு நிரநதரத்தீர்வு காணும்வரை நாமும் யுத்தத்துக்குத் தயாராகவே இருக்கவேண்டும். சமாதான முயற்சிகளில் நோர்வே மட்டும் பங்களிப்பு வழங்கவில்லை.

நோர்வேக்குப் பின்னால் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகள் இந்தச் சமாதான முயற்சிகளில் பங்களித்து வருகின்றன.

தாய்லாந்துகூட ஒரு வகையில் பங்களிப்பை நல்கி வருகின்றது. இந்தியாவும்கூட நல்ல நண்பனாக ஒத்துழைப்பு வழங்கிவருகிறது -

எனவும் தெரிவித்துள்ளார் அமைச்சர் மிலிந்த மொறகொட.

## சாவகச்சேரி வைத்தியசாலையில் மீண்டும் உணவு வழங்கும் பணி!

சாவகச்சேரி வைத்தியசாலையில் ஊழியர்களுக்கும் நோயாளர்களுக்கும் உணவு வகைகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான பாத்திரங்கள் உட்பட அனைத்துப் பொருட்களும் யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையால் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஏனைய வைத்தியசாலைகளில் தற்காலிகமாகப பணிபுரியும் சாவகச்சேரி வைத்தியசாலையின் ஊழியர்கள் தம் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (34)

# இனத்துவக் கலாசாரத்தினை முதன்மைப்படுத்தும் தென்னாபிரிக்காவின் அதிகாரப் பகிர்வுச் சமஷ்டி

**சுயநிர்ணயம் - ஒரு பார்வை**
**பகுதி - 19**

சுயநிர்ணயம் - ஓர் பார்வை என்ற இந்த வாராந்தக்கட்டுரை இவ்வாரம் தொடக்கம் தென்னாபிரிக்க சமஷ்டி முறையைப் பற்றி ஆராய உள்ளது.

தென்னாபிரிக்கச் சமஷ்டியானது



நெல்சன் மண்டேலா

ஏனைய சமஷ்டி முறைகளுக்கு அப்பால் தனககே உரித்தான இனத்துவ முரண்பாட்டினைத் தீர்க்கும் முகமாக "அதிகாரப் பகிர்வு சமஷ்டி" (Devoulational federialism)யினை 1996 முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தென்னாபிரிக்காவானது பிரித்தானியாவின் ஏனைய காலனித் துவ நாடுகளைவிட அதிக காலமாக பிரித்தானியாவின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

அத்துடன் - பிரித்தானியக் குடியேற்றக்காரர்கள் அங்கு பெருமளவில் சென்று காலனித்துவ காலத்தில் குடியேறியும் இருந்தனர். அவ்வாறு குடியேறியவர்களே அரசாட்சி செய்யுமளவிற்கு வலிமை பெற்றிருந்தனர்.

இவ்வாறு வலிமை பெற்றிருந்த ஆங்கிலேயர்கள் மொத்தச் சனத்தொகையில் மிகவும் சிறுபான்மையினராக இருந்தனர். காலனித்துவச் செல்வாக்கினால் சிறுபான்மை ஆங்கிலேயர் தென்னாபிரிக்க சுதேசிகள் மீது பூரண கட்டுப்பாட்டினை வைத்திருந்தனர்.

தென்னாபிரிக்கர்கள் தமக்கு சுதந்திரம் வேண்டும் எனக் கோரிப் போரிட்ட போதும் - அவர்களுக்கு இறைமையுள்ள சுதந்திரம் கிடைக்கவில்லை.

ஒரு வகையில் 2 ஆம் உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் மாறிவந்த சர்வதேச அரசியலை அனுசரித்துப் போக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த போதும் தென்னாபிரிக்காவை தனது கட்டுப்பாட்டில் இருந்து இழக்க பிரித்தானியா விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

இதற்கு தென் ஆபிரிக்காவின் புவியியல் அமைவிடமும் அதன் தங்கு நிலைப்பொருளாதாரக் கட்டமைப்பும் மிக முக்கியமான காரணிகளாகும்.

புவியியல் அமைவிடத்தினைப் பொறுத்த வரையில், தென்னாபிரிக்காவினை, பிரித்தானியா கட்டுப்படுத்தி வைத்திருப்பதன் மூலம் தென் - அத்திலாந்திக் சமுத்திரத்தினையும் இந்து சமுத்திரத்தினையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே பிரித்தானியா விரும்பியது.

பொருளாதார ரீதியாக எடுத்து நோக்குவோமாயின், 342 வருட பிரித்தானிய ஆட்சியின் கீழ் தென்



ஆபிரிக்கா தனக்குரிய சுதேச பொருளாதாரக் கட்டமைப்பினை முற்றாகச் சிதைத்து - ஆங்கிலேயரின் பொருளாதாரத்திற்கு ஏற்றவகையான பொருளாதாரத்தினையே (மூலப்பொருள் ஏற்றுமதி பொருளாதாரம்) பிரதானம் எனக்கொண்டிருந்தது.

ஆனால் - ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் விடுதலைப்போராட்டம் காரணமாக, 1961இல் காலனித்துவத்தில் இருந்து தென்ஆபிரிக்காவிற்கு விடுதலை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரித்தானியாவிற்கு ஏற்பட்டது.

இதனால் பொருளாதார ரீதியாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள தென்னாபிரிக்காவை நம்பியிருக்க வேண்டிய தேவை பிரித்தானியாவுக்கு பெருமளவில் இல்லாத போதும், மறைமுகமான பொருளாதார அழுத்தங்களை நவ காலனித்துவத்தின் மூலமாக அது மேற்கொண்டு வந்தது.

அதேவேளை, இந்தக் காலகட்டத்தில் தென்னாபிரிக்கா சுதந்திரம் பெற்றபோது, அங்கு ஒரு கைப்பொம்மை அரசை பிரித்தானியா நிலை நிறுத்தியிருந்தபடியால் (அதாவது சிறுபான்மை வெள்ளையர்களின் ஆட்சி தொடர்ந்தபடியால்)- பிரித்தானியா தென்னாபிரிக்காவின் காலனித்துவ விடுதலையைப் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. பிரித்தானியா, தான் எதனை எதிர்பார்க்கின்றதோ அதனை சிறுபான்மை ஆங்கிலேயரின் அரசு மூலம் தொடர்ந்தும் சாதித்துக் கொண்டது.

ஆனால், 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் - தென்னாபிரிக்காவின் தலைவிதியை மாற்றியமைத்தது. அன்றிலிருந்து சிறுபான்மை ஆங்கிலேயர்களின் ஆட்சி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு, ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதுடன் - தென்னாபிரிக்க சுதேசி மக்கள் தமது தனித்துவத்துடன் ஆட்சியைத் தொடங்கினர்.

1994இல் பதவியேற்ற நெல்சன் மண்டேலா, 1996இல் புதிய அரசியல் அமைப்பினை சமஷ்டி முறைமையிலான ஆட்சி முறைக்கு ஏற்ற வகையில் உருவாக்கினார்.

இந்த அரசியல் திட்டத்தில் எவ்விதத்தில் தனித்த ஒரு இனக் குழுவின் அல்லது சமூகத்தின் நலனுக்கு முனனுரிமை கொடுக்காது தெனனாபிரிக்காவில் உள்ள அனைத்து சமூகங்களினதும் நலன்களை ஒரே மாதிரியாகப் பேணத்தக்க வகையில் சமஷ்டி அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது.

அத்துடன் சுயாட்சியினை அல்லது சுயநிர்ணயத்தினை, இனக் குழுச் சுயாட்சியினை அல்லது சுயநிர்ணயத்தினை இனக் குழுச் சுயாட்சியாக (Ethnic Autonomy) வரையறுத்து - குறித்த இனக் குடும்பத்தின் பரம்பலுக்கு ஏற்ற வகையில் (demographic patterns) பிராந்திய அபிவிருத்தியில் (Regional Developement) பங்கேற்கத்தக்கவாறு மேற்படி சமஷ்டித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுவாக சமஷ்டியானது - அபிவிருத்தியடைந்த செல்வந்த நாட்டுக்கே உரித்தானது என்பதற்குப்

**வேலும் மயிலும் சேந்தன்**

பதிலாக, அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டில் தனது இனத்துவ முரண்பாட்டிற்கு தீர்வுகாணும் வகையில் உருவான அதிகாரப் பகிர்வுக்குச் சமஷ்டியே இனக்குழும அடிப்படையில் தொழிற்படும் இன்றைய உலகில் ஒரு புதிய வரலாறாகப் பதிவாகியுள்ளது.

(அடுத்தவாரம் தொடரும்...)

# 'டொல்பின்' கலாசாரம் ஒருபுறம் தாயகக் கட்டமைப்பு மறுபுறம்

அழிந்த தென்னந்தோட்டங்களும், சிதைந்த குடியிருப்பும் வெளிப்படையாக யுத்த அனர்த்தங்களை வெளிக்காட்டிக் கொண்டு இருந்தாலும், மக்கள் நெற்பயிர் செய்திருப்பது நம்பிக்கையை தருகின்றது. இது அண்மையில் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்த உலக வங்கியின் உப தலைவர் கலாநிதி மீக்கோ நிஷிமிசு வடமாகாணம் பற்றிசெய்த இறுதி மதிப்பீடாகும்.



இக்கருத்தானது சென்ற ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்று பதினொரு மாதங்களின் பின் செய்யப்பட்ட ஒரு மதிப்பீடு என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

எந்தவொரு நாட்டிலும் யுத்தம் பல ஆறாக் காயங்களை ஏற்படுத்துவது இயல்பு. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை ஒரு சிறிய மக்கள் கூட்டம் தாங்கிக் கொள்ள முடியாத அளவு பாரத்தை கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக தாங்கி விட்டார்கள். இந்தநிலையில்தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் சற்று மூச்சுவிடக்கூடிய அவகாசத்தைத் தமிழ் மக்களுக்குக் கொடுத்திருக்கிறது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம், என்று ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்டத்தை அடைந்ததோ, அன்றிலிருந்து தமிழ் மக்கள் சொல்லொணாத்துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். உண்மையில் போராட்டத்திற்கான போராளிகள், பொருளுதவி போன்ற எல்லாமே மக்களின் நன்கொடையின் மூலமே நடந்தேறின.

இந்த அடிப்படையில்தான், நிலவுகின்ற சமாதான சூழலிலும் அதனை முழுமையாக அனுபவிக்கும் அருகதை இம்மக்களுக்கு - போராட்டத்தில் எதுவித பங்களிப்பும் செய்யாத மக்கள் இருந்தாலும் - சமாதானச் சூழல் அவர்களுக்கும் "வரம்" அருளி இருக்கிறது என்பதும் மறுப்பதற்கில்லை.

இச்சமாதானச்சூழல் வன்னி மக்களுக்கு உடனடி வளர்ச்சிக்கான, வெளிப்படையான அபிவிருத்தி எதனையும் கொடுக்காவிட்டாலும், தங்கள் நிலத்தில் நிம்மதியாக இருப்பவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்துள்ளது. வவுனியாவினூடாக "டொல்பின்" வான்களில் வருவோர் நேரடியாக குடாநாட்டினுள் வருபவர்களே. இவர்களில் பலர் வெளிநாடுகளில் இருந்தும், இலங்கையின் தென்பகுதிகளில் இருந்தும் பயணம் செய்பவர்கள். இவர்களைப் பொறுத்தவரை தாம் சேகரித்த சொத்துக்களை எப்படியாவது தமது சொந்த வீடுகளில் கொண்டு வந்து "பிரதிட்டை" செய்துவிட வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பவர்கள். இந்தநோக்கத்தின் பயணத்தில் குறுக்கிடுகின்ற எல்லாத் தடைகளை யும் தமது "கனவான்" தனத்தாலும் கடந்துவிடக் கூடியவர்கள். இவர்களைப் பொறுத்தவரையில் டொல்பின் வான்களில் வந்து தமது சொந்த

## வன்னி வள நாட்டிலிருந்து விரிகின்றது ஒரு 'விருட்சம்'

(எப்போதோ கைவிட்டுப்போன) ஊர்களில் இறங்குவதே ஒரு "தாயகம் நோக்கிய பயணம்"தான். யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை 24 மணிநேர மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகள், விமான சேவை போன்ற வசதிகள் இருப்பதும் இந்தத் தாயகம் நோக்கிய பயணத்துக்கு நம்பிக்கையைக் கொடுத்த முக்கிய காரணிகளாகும்.

இவ்வாறானவர்களின் தாயகம் நோக்கிய பயணம், ஒரு வாரத்தில் அல்லது பத்து நாட்களில் முடிந்து வருகிறது. இது வெறும் உறவைப் புதுப்பித்துக் கொள்ளுகின்ற விடயமாகும்.

இவ்வாறான டொல்பின் கலாசாரத்துக்கு அடுத்தபடியாக குடாநாட்டிற்குள் வந்து சேர்பவை கட்டடப் பொருட்களாகும். சீமெந்து, கூரைத் தகடுகள், சப்புப் பலகைகள் (இவ்வகைகளுக்கு விடுதலைப் புலிகளின் ஆயபகுதியினரால் வரி அறிவிடப்படுவதில்லை. இதனால் தென்பகுதி சிங்கள முதலாளிமார் அதிக வருவாயைப் பெறுகின்றனர்) தரம் குறைந்த கட்டடங்கள், ஏனைய வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் இன்னோரன்ன உடனடித்தேவைக்கான பொருட்கள் என்பன முக்கியமாகின்றன. இவ்வாறான பொருட்கள் முல்லைத்தீவு, துணுக்காய்ப் பகுதிகளை நோக்கிச் செல்வதில்லை. மாறாக அங்கு 1995 இன் பின் யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்த மக்கள் குடியிருந்த தற்காலிக வீடுகள் கூட சிதைக்கப்பட்டு வருகின்றன. அங்கு பொதுவாக அழிப்பு நடவடிக்கைகளின் அடையாளங்களே காணப்படுகின்றன. அப்பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடாநாட்டு மக்கள் என ஒரு சிலர் தொடர்ந்தும் வாழ்கின்றனர். அவர்களின் சொந்த வீடுகள் இலங்கை இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுவிட்டதே அதற்கான காரணமாகும்.

இன்னும் குடாநாட்டில் பல வீடுகளில் மனிதர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. 1995 இன பின்பான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்ற எனது ஆசிரிய நண்பர் ஒருவர் இவ்வாறு ஒரு கருத்தைக் கூறினார். 'இங்க இருக்கிற பல பெரிய வீடுகளின் சொந்தக்காரர் இல்லை. அதுகளைப் பாதுகாக்க அல்லது காவலுக்கு யாராவது ஒன்றுரெண்டு பேர் இருக்கினம். உண்மையில் அது எவ்வளவு வேஸ்ட்(Waste). வேறு வீடில்லாத சனங்களுக்கும் கொடுக்க மாட்டினம்.'

இந்த விடயத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் தமது வீடுகளைத் தொலைத்தவர்கள்தான். ஏனெனில், அவர்கள் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தமது சொந்த ஊர்களை விட்டு வெளியேறி யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் "தொத்திக் கொண்டு" வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. 1995 ஆம் ஆண்டில் ரிவிரெச (சூரியக்கதிர்) இராணுவ நடவடிக்கையின் பின் முன்பிருந்த தொத்திக்கொண்டு வாழ்ந்த வாழ்க்கையும் கனவாகிவிட்டது. அகதிமேல் அகதியாகிய இம்மக்கள், சமாதானச் சூழலிலும் தமது வீடுகளுக்குச் செல்லத் தடையாக இருக்கிறது. இவர்களின் நிலையோ "முன்பு புலம்பெயர்ந்து பிந்திக் குடியேறும் நிலையாக" இருக்கிறது.

இம்மக்கள் வன்னியின் பல பாகங்களில் "கஷ்ரச் சீவியம் நடத்துகின்ற நிலையில், அபிவிருத்தியடைந்து வருகின்ற கிளிநொச்சி பகுதியிலோ, யாழ்ப்பாணத்திலோ குடியேறமுடியாத நிலையில் இருந்து வருகின்றனர். திடீரென எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் கிளிநொச்சி நகரத்தை மையப்படுத்தியுள்ளதால் அங்கு குடியேறுவோரின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இத் திடீர் சன நெருக்கடியானது கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் வீடுகள், காணிகளுக்கான கேள்வியை உயர்த்திவிட்டது.


இதைவிட பல மக்கள் தமது சொந்த வீடுகளில் குடியேறுவதற்கு விருப்பமாக இருந்தபோதிலும் போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, பாடசாலை வசதிகள் போன்றன முழுமையாகச் செயற்படாத நிலையில் அந்த நோக்கத்திலிருந்து பின் வாங்குவது தெரிகிறது.

எது எவ்வாறு இருப்பினும் கடந் காலங்களுடன் ஒப்பிடும்போது தற்போதுள்ள நிலை மக்கள் மத்தியில் மகிழ்வுறும்படி திருப்தியையும்

**- விஜயன் -**

அதீத நம்பிக்கையையும் கொடுதத்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த அடிப்படையிலேயே உலக வங்கியின் உப தலைவரின் கருத்து நியாயபூர்வமானதாகவும், யதார்த்தமாகவும் காணப்படுகிறது.

ஒரு ம்ளையிலிருந்து பெரு விருட்சமே எழுந்து வருகிறது. இன்று தமிழர் தாயகத்தின் நம்பிக்கைக்குரிய முளை கிளிநொச்சியிலேயே துளிர்விடுகிறது.









## சயீட் அன்வர்



*பிறந்தது* - 06.09.1968 சிந்துமாகாணம்

*அணிகள்* - A.D.வங்கி, கராச்சி கிரிக்கெட் கழகம், யுனைட்டட் வங்கி, லாகூர் கிரிக்கெட் கழகம்.

இடதுகைத் துடுப்பாட்ட வீரர் (ஆரம்பம்)

இடதுகை மெதுவான ORTHODOX

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மே.இ. 90/91 பைசலாபாத்

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் மே.இ. 88/89 பேர்த்.

டெஸ்ட்-55, ஓட்டங்கள் 4052, கூடியது 100. 11 சதம், 25 அரைச் சதங்கள். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் -242, ஓட்டங்கள் 8605, கூடியது 194, 19 சதம், 43 அரைச் சதங்கள்.

இவர் நன்றாக ஆரம்பித்தால் அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிக்கும், வேகமான ரன் குவிப்பு. பல சந்தர்ப்பங்களில் திறமையான பந்து வீச்சையும் எளிதாக ரன்னாக மாற்றுபவர். இவருக்கு வியூகம் அமைப்பது மிகக் கடினம். முதல் 15 ஓவர்களில் கணிசமான ஓட்ட எண்ணிக்கை சேர்ப்பவர்.

## இன்சமாம் உல் ஹக்



*பிறந்தது* - 03.08.1970 முல்தான், பஞ்சாப்.

*அணிகள்* - யுனைட்டட் வங்கி லிமிட்டட், நேஷனல் பாங்க் ஒப் பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

மெதுவான இடதுகை ORTHODOX

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 1992 பர்மிங்ஹாம்.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் மே.இந்தியத் தீவுகள் 91/92 லாஹூர்.

டெஸ்ட்கள்- 85, ஓட்டங்கள் 6214, கூடியது 329, 17 சதம், 32 அரைச்சதங்கள்.

ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள்- 284, ஓட்டங்கள் 8938, கூடியது 137, 8 சதம், 64 அரைச்சதங்கள்.

டெஸ்ட் தரக்கணிப்பில் துடுப்பாட்டத்தில்- முதலாவது, நான்காவது, ஆறாவது இடங்களைப் பெற்றவர். இம்ரான்கானின் எதிர்வுகூறலை உண்மையாக்கிய அதிசிறந்த துடுப்பாட்ட வீரர்.

## ரஸீட் லத்தீவ்



*பிறந்தது* - 14.10.1968. சிந்து மாகாணம்.

*அணிகள்* - கராச்சி கிரிக்கெட் அஷோசியேசன், யுனைட்டட் வங்கி, அலைட் வங்கி, பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

LEG BREAK, விக்கெட் காப்பாளர்.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 92 ஓவல்.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 2002/03 சார்ஜா.

34 டெஸ்ட், 143 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் விளையாடியவர். ஒரு டெஸ்ட் சதம், 6 அரைச் சதம், ஒருநாள் அரைச்சதம் 3. படிப்படியாக மிகத் திறமை வாய்ந்த விக்கெட் காப்பாளராக வளர்ந்து வருபவர்.

## த:பீக் உமர்



*பிறந்தது* - 20.06.1981 லாகூர், பஞ்சாப்.

*அணிகள்* - ஹபீப் வங்கி, லாகூர் கிரிக்கெட் சம்மேளனம், பாகிஸ்தான்.

இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.

வலதுகை OFF BREAK

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பங்களாதேஷ் 2001/02 முல்தான்.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2001/02 சார்ஜா.

டெஸ்ட்- 18, ஓட்டங்கள் 968, கூடியது 135, சதம் 3, அரைச்சதங்கள் 5.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் -6, ஓட்டங்கள் 180, கூடியது 76, அரைச்சதம் 2.

## ஷாகிட் அப்ரீடி



*பிறந்தது* - 01.03.1980 கைபர்

*அணிகள்* - கராச்சி கிரிக்கெட் சம்மேளனம், ஹபீப் வங்கி, லீஸ்டர் ஷயர் (இங்.), பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்டம்.

LEG BREAK GOOGLY.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 98/99 கராச்சி.

*ஒரு நாள் அறிமுகம்*- எதிர் கென்யா 96/97 நைரோபி.

டெஸ்ட்கள்- 14, ஓட்டங்கள் 780, கூடியது 141, சதம் 2, அரைச்சதங்கள் 4.

பந்து வீச்சில் 21 விக்கெட்டுக்கள், திறமை 5/52, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 173, 3871 ஓட்டங்கள், கூடியது 109, 3 சதம், 22 அரைச்சதங்கள், 128 விக்கெட்டுக்கள், திறமை 5/40. பொதுவாக ஒருநாள் போட்டிகளில் - 5633 ரன் மற்றும் 194 விக்கெட் பெற்றவர்.37 பந்துகளில் 100 ஒரு சாதனை, அதில் 11 ஆறுகள் அடக்கம்.

## வக்கார் யூனிஸ்



*பிறந்தது* - 16.11.1971 பஞ்சாப்.

*அணிகள்* - நேஷனல் பாங்க் ஒப் பாகிஸ்தான், யுனைட்டட் பாங்க் லிமிட்டெட், பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

வலதுகை வேகப் பந்துவீச்சாளர்.


*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 89/90 கராச்சி.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் மே.இந்தியத் தீவுகள் 2002/03 கேப்ரவுண்.

87 டெஸ்ட், 373 விக்கெட்டுக்கள், திறமை 7/76. ஒருநாள் போட்டிகள் 256, விக்கெட்டுக்கள் 409, திறமை 7/36.

வக்கார் யூனிஸ் மைத்திலா - மிகவும் அச்சுறுத்தும் பந்து வீச்சாளர். மிகக்குறைந்த டெஸ்டுகளில் 200 விக்கெட் பெற்றவர். 92இல் இவரும் அக்ரமும் சோடியாக இங்கிலாந்தில் பந்து வீசியமை கிரிக்கெட் வரலாற்றில் சுட்டிக்காட்டப்படுகிறது.

## மொஹம்மட் ஸமி



*பிறந்தது* - 24.02.1981. கராச்சி.

*அணிகள்* - பாகிஸ்தான் நேஷனல் பாங்க், பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்டம்.

வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.

*டெஸ்ட் அறிமுகம்*- எதிர் நியுசிலாந்து 2000/01.

*ஒருநாள் அறிமுகம்* -எதிர் இலங்கை 2000/01.

9 டெஸ்ட், 25 விக்கெட்டுகள், 18 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 25 விக்கெட்டுகள், திறமையான பந்து வீச்சு டெஸ்ட் 5/36, ஒருநாள் 4/41. மெதுவாக அறியப்பட்டு வரும் வேகப்பந்து வீச்சாளர்.

## சலீம் எலாஹி



*பிறந்தது* - 21.11.1976. பஞ்சாப்.

*அணிகள்* - ஹபீப் வங்கி, லாகூர் கிரிக்கெட் சம்மேளனம். யுனைட்டட் வங்கி, பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.


வலதுகை OFF BREAK.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்ரேலியா 95/96 பிறிஸ்பேன்.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 95/96 குஜ்ரன்வாலா.

டெஸ்ட் - 13, ஓட்டங்கள் 436, ஒரு அரைச்சதம். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 36, ஓட்டங்கள் 1271, கூடியது 135, சதம் 4, அரைச்சதம் 6.

இஜாஸ் அஹமட்டின் இடத்தை நிரப்ப வந்தவர். முதற்தர போட்டி அனுபவம் இன்றியே தேசிய அணிக்குள் வந்தவர். உள்ளூர் போட்டியொன்றில் வேகமான சதம், 19 வயதுப் பிரிவில் நியூசிலாந்து சுற்றுப்பயணம்- இரண்டும் தேசிய அணிக்குள் நுழைய வழிவகுத்தது. 2002 இல் சிம்பாப்வே அணிக்கு எதிராகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடியவர்.




## அப்துர் ரஸாக்



*பிறந்தது* - 02.12.1979. லாகூர்.

*அணிகள்* - கான் றிசேர்ச் லாப்ஸ், லாகூர் கிரிக்கெட் கழகம், பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.

*டெஸ்ட் அறிமுகம்*- எதிர் சிம்பாப்வே 96/97 லாகூர்.

டெஸ்ட்கள்- 24, ஓட்டங்கள் 1001, கூடியது 134, சதம் 3, அரைச்சதங்கள் 4, 48 விக்கெட்டுகள், திறமை 4/25. ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 119, ரன் 2188, கூடியது 112, சதம் 1, அரைச்சதங்கள் 12, 153 விக்கெட், திறமை 6/35. சந்தேகமில்லாமல் துல்லியமான சகலதுறை வீரர். நிலைமை உணர்ந்து விளையாடும் ஆற்றல்.

## சோஹெய்ப் அக்தார்



*பிறந்தது* - 13.08.1975. பஞ்சாப்

*அணிகள்* - பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை, பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்டம்

வலதுகை வேகப்பந்துவீச்சு

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் மேற்கிந்தியத் தீவுகள் 97/98 ராவல்பிண்டி

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 2000/03.

டெஸ்ட்- 25, விக்கெட் 88, திறமை 6/11, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 75, விக்கெட் 122, திறமை 6/16.

பிரெட் லீயுடன் ஒப்பிடப்படுகின்றார். 99 மைல் வேகத்தில் பந்து வீசியவர். 100 மைல் வேகத்தில் வீசுவது இலட்சியம்.

## மொஹமட் யூனிஸ் கான்



*பிறந்தது* - 29.11.1977. வடமேற்கு எல்லை மாகாணம்.

*அணிகள்* - பெஷாவர் கிரிக்கெட் அணி, ஹபீப் வங்கி பாகிஸ்தான்

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

LEG BREAK பந்து வீச்சு.

*டெஸ்ட் அறிமுகம்*- எதிர் இலங்கை 1999/2000 ராவல்பிண்டி

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 99/2000 கராச்சி.

டெஸ்ட்- 27, ஓட்டங்கள் 1646, திறமை 153, சதம் 5, அரைச்சதங்கள் 9.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் -70, ஓட்டங்கள் 1826, திறமை 90, அரைச்சதம் 14.

## அஸார் மெஹமூட்



*பிறந்தது* - 28.02.1975 ராவல்பிண்டி

*அணிகள்* - பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை, யுனைட்டெட் பாங்க் லிமிட்டட், பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தென்னாபிரிக்கா 97/98 ராவல்பிண்டி.

*ஒருநாள் அறிமுகம்*- எதிர் இந்தியா 1996 - றொரன்டோ

டெஸ்ட்கள்- 21, ரன் 911, கூடியது 136, 3 சதம், ஒரு அரைச்சதம், 39 விக்கெட்டுக்கள், திறமை 4/50. ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 123, ரன் 1309, 3 அரைச்சதங்கள், 112 விக்கெட்டுக்கள், திறமை 6/18.

## சக்லெய்ன் முஷ்டாக்



*பிறந்தது* - 29.12.1976 பஞ்சாப்.

*அணிகள்*- சர்ரே (இங்), பாகிஸ்தான்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

வலதுகை OFF SPINNER.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இலங்கை 95/96 பெஷாவர்.

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 95/96 குஜ்ரன்வாலா.

2000 ஆம் ஆண்டின் விஸ்டன் கிரிக்கெட் வீரர்.

டெஸ்ட்- 47, விக்கெட் 205, திறமை 8/164, ஒருநாள் 165, விக்கெட் 284, திறமை 5/20.

துடுப்பாட்டத்தில் சில சதங்கள் பெற்றிருப்பவர். உலகக் கிண்ண வரலாற்றில் HATTRICK பெற்ற இருவரில் ஒருவர், முரளியுடன் ஒப்பிடப்படும் OFF SPINNER. ஒருநாள் போட்டிகளில் கூடுதலாகச் சோபிப்பவர், பாகிஸ்தானின் பல வெற்றிகளுக்குக் கைகொடுத்தவர். இவருக்கு தென்னாபிரிக்காவின் வேகமான களங்கள் சவாலாக இருக்கும்.

## யூசுப் யொகானா



*பிறந்தது.* - 27.08.1974 லாகூர், பஞ்சாப்

*அணிகள்* - பகவல்பூர் கிரிக்கெட் கழகம். லாகூர் கிரிக்கெட் கழகம், பாகிஸ்தான் சர்வதேச விமானப் போக்குவரத்து.

வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.

*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் தென்னாபிரிக்கா 97/98 டர்பன்.

*ஒரு நாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 97/98 ஹராரே

டெஸ்ட் -43, ரன் 3149, கூடியது 204, சதம் 10, அரைச்சதம் 17.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் - 121, ரன் 4160, கூடியது 141, சதம் 8, அரைச்சதங்கள் 23.

பாகிஸ்தானின் நம்பிக்கை நட்சத்திரம். எந்தப் பந்துவீச்சையும் தன் இஷ்டப்படி கையாளும் திறமை கொண்டவர். டெஸ்ட் ஆட்டங்களில் தரையோடும், ஒருநாள் ஆட்டங்களில் வேகமாகவும்- பொதுவாக இடம் அறிந்து பந்தைச் செலுத்துவதிலும் ஆற்றல் மிக்கவர். ஜாவிட் மியாண்டாட்டின் வழிகாட்டலில் நன்கு மெருகூட்டப்பட்டவர். இவர் பிறையன் லாரா, சச்சின், ஸ்ரீவ் வோவுடன் ஒப்பிடப்படுபவர்.

## வாசிம் அக்ரம்



*பிறந்தது* - 3.7.1966 லாகூர்

*அணிகள்* - பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை, லங்காஷயர் (இங்), பாகிஸ்தான்.

இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.

இடதுகை வேகப்பந்து வீச்சாளர்.

*டெஸ்ட் அறிமுகம்*- எதிர் நியூசிலாநது 84/85 ஆக்லண்ட்

*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 84/85 பைசலாபாத்.

டெஸ்ட்- 104, ரன் 2898, அதிகூடியது 257, 414 விக்கெட், திறமை 7/119.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 350, ரன் 3646, விக்கெட்டுக்கள் 490. கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னர். டெஸ்டில் 10 விக்கெட் பெற்ற இளைய வீரர். இவருக்கு 2003 உலகக் கிண்ணம் பிரியாவிடைச் சுற்றுப் போட்டியாக இருக்கும்.

## நாளும் ஒரு வினா

**1975 முதல் நடைபெற்ற ஆறு உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்குபற்றிய ஓரேயொரு வீரர் யார்?**

**ஜாவீட் மியன்டாட் (பாகிஸ்தான்)**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு பரீட்சை

# விதிகளை மீறி 14 பேர் தெரிவு!

## யாழ்ப்பாணத்தில் எட்டுப்பேர் பற்றி புகார் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது நிர்வாக அமைச்சினால் அண்மையில் வட- கிழக்குப் பகுதி களுக்கென நடத்தப்பட்ட நிர்வாக சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சையில் - பரீட்சை விதிகளை மீறி 14 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

தற்போது சேவையில் உள்ளவர் கள் நிர்வாக சேவைப் போட்டிப் பரீட் சையில் இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்ற முடியாது.

ஆனால், அண்மையில் நடந்த போட்டிப் பரீட்சையில் 14 பேர் இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றித் தெரிவு செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட் டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து எட்டுப் பேரும், மன்னாரிலிருந்து இரு வரும், வவுனியாவிலிருந்து ஒருவ ரும், திருகோணமலையிலிருந்து இரு வரும், அம்பாறையிலிருந்து ஒருவரும் இரண்டு தடவைகளுக்கு மேல் நிர் வாகசேவைப் போட்டிப் பரீட்சையில் தோற்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, பொது நிர்வாக அமைச்சு, குறித்த அரச ஊழியர்களின் சுயவிபரக்கோவைகளை பரிசோதனை செய்ய முடிவுசெய்துள்ளது.

இதுகுறித்துத் தெரிவித்த பொதுச் சேவை ஆணைக்குழு, நேர்முகத் தேர் வின் பின்னரே நியமனங்கள் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளது.

### குடிபோதையில் பயணி கலாட்டா

# கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்ட விமானம் மீண்டும் தரையிறங்கியது

குடிபோதையில் பயணி ஒருவர் விமானத்தில் கலாட்டா செய்ததால், டோகா நோக்கிச் சென்று கொண்டி ருந்த விமானம் மீண்டும் கட்டுநாயக் காவில் தரையிறக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரி யவருவதாவது -

நேற்றுமுன்தினம் கட்டார் எயர் வேய்ஸ் விமானமொன்று டோகா நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. விமா னம் பறந்து கொண்டிருந்தபோது, பயணி ஒருவர் குடிபோதையில் கலாட்டா செய்தார்.

இதையடுத்து விமானம் மீண்டும் கட்டுநாயக்கா விமான நிலையத்துக் குத் திருப்பப்பட்டது. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறக்கப் பட்ட விமானத்திலிருந்து குறிப்பிட்ட பயணி விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் அங்கிருந்து வெளி யேற்றப்பட்டபின்னர், விமானம் மீண் டும் பயணத்தைத் தொடங்கியது.

## விபத்தில் படுகாயம்

வதிரி - உடுப்பிட்டி வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில், இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த பா.பழனி வேல் என்பவர் படுகாயமடைந்தார். லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதால் இந்த விபத்து ஏற்பட்டது.

# சுதந்திர தின வைபவ ஒத்திகை நிகழ்வில் ஜனாதிபதிக்குப் பதிலாக பெண் அதிகாரி

## உயர் படையதிகாரிகள் விசனம்

(கொழும்பு)

சுதந்திரச் சதுக்கத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திரதின வைபவத் தின் ஒத்திகையின்போது, ஜனாதி பதிக்கு பதிலாக ஜனாதிபதி மாளிகை யில் இருந்து பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பெண் அதிகாரி, ஜனாதி பதி நிற்கும் மேடையில் நின்றவாறு உயர் இராணுவ அதிகாரிகளின் இரா ணுவ மரியாதையை ஏற்றுக்கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் ஜனாதிபதி யின் சகா ஒருவரே பிரசன்னமாகி, இந்த மரியாதையை ஏற்று வந்துள்ளதாக வும், இந்தமுறை பெண் பாதுகாப்பு அதிகாரி மரியாதையை ஏற்கவந்த தால், பாதுகாப்பு அதிகாரிகள் விச னம் அடைந்ததாகத் தெரியவருகின்றது.

சுதந்திர தின ஒத்திகையின்போது இந்த வருடம் சீருடையில் இராணுவ அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரி களும் முதன்முறையாகப் பங்குபற்றி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா சென்ற மகிந்த குஜ்ராலைச் சந்தித்தார்

இந்தியாவுக்கு உத்தியோகபூர் வமான விஜயத்தை மேற்கொண் டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய அர சியல் நிலைவரம், வடக்கு - கிழக் குப் பிரச்சினைகள் என்பன குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின்போது முக்கியமாகக் கவனத்தில் கொள் ளப்பட்டதாக எதிர்க்கட்சி அலுவல கம் அறிவித்துள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய அரசு மிகுந்த சிரத்தையு டன் செயற்படும் என்று நம்புவதாக, முன்னாள் இந்தியப் பிரதமர் குஜ் ரால், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மேலும் பல இந்தியத் தலைவர்களையும் சந்தித்துப் பேச் சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப் பின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்தமை தெரிந்ததே.

## விண்ணிலிருந்து மண்ணுக்கு...



தரையிறங்கும்போது வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்கலத்தின் துண்டுகளும், விண்வெளி வீரர்களின் உடற்சிதைவுகளும் ரெக்ஸாஸ் மாநி லத்தில் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று, அடர்ந்த காட் டுப் பகுதியில் பொலிஸ் அதிகாரி ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இத் துண்டுகள், கதிரியக்கத் தாக்கம் உடையனவாக இருக்கலாம் என அஞ்சப் படுவதால், இவற்றைத் தொடக்கூடாது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# பொன்னாலை கடற்படையினரை வெளியேற்ற பாதுகாப்பு அமைச்சரை மகேஸ்வரன் சந்திப்பார்!

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெரு மாள் ஆலயத்தில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை அங்கிருந்து வெளி யேற்றுவது தொடர்பாக, நாளை பாது காப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை அமைச்சர் மகேஸ்வரன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நேற்றுமுன்தினம் வட-கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் ரங்கராஜாவும், இந்து கலாசார அமைச் சர் மகேஸ்வரனும் பொன்னாலைப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரடியாக அவதானித்தனர்.

மேற்படி ஆலயத்திற்குச் சொந்த மான கட்டடத்தில் கடற்படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கின் றனர். இதனால் இப்பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்வதற்கு பல கட் டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இப் பகுதிகளில் உள்ள கடற்கரை வீதிகளை மக்கள் பயன்படுத்துவது தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பிரச்சினைகள் தொடர் பாக ஆராயவே அமைச்சர் மகேஸ் வரன் நாளை பாதுகாப்பு அமைச்சரை சந்திக்கவுள்ளார்.

(க,லி)

### மூவாயிரம்...

வேண்டிய நிலையில் இவர்கள் இருப்பதை வெளிப்படுத்தும் நோக் கத்திலேயே இவ் ஊர்வலம் நடை பெற்றது.

பேரணியின் முடிவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைப் பதற்கான மகஜர், மேலதிக அரச அதிபர் இரகுநாதபிள்ளையிடம் கையளிக்கப்பட்டது. (03)

### யாழ். வரும்...

பின்னர் யாழ்.இராணுவ உயரதி காரிகளையும் சந்தித்துப் பேசுவார். அத்துடன் பொதுஅமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளையும் இவர் சந்திப்பதுடன் மக்களின் வாழ்வி டங்களுக்கும் விஜயம் செய்து பார் வையிடவுள்ளார்.

மாலை 3 மணியளவில் பஸ்தியன் விடுதியில் பத்திரிகையாளர்களைச் சந் திக்கவும் ஏற்பாடாகியுள்ளது. (09,லி)

### சூரிச் செல்லும்...

இக்குழுவினர் நேற்று மாலை சுவிற்சர்லாந்தின் சூரிச் நோக்கிச் செல்லும் விமானத்தில் பயணத்தை ஆரம்பித்தாகவும் - சூரிச்சிலிருந்தே பேர்ளினுக்கு புலிகள் தரப்புக்குழு பய ணத்தை மேற்கொள்ளும் எனவும் ஏ.பி. செய்திச்சேவை தெரிவித்தது. சூரிச்சிலிருக்கும் போது அங்குள்ள தமிழ் மக்களுடன் புலிகள் தரப்பினர் கலந்துரையாடவுள்ளதாகவும் அச் செய்திச் சேவை மேலும் தெரி வித்தது.

### 8 பொதுமக்கள்...

முன்னிலையில் இந்த எட்டுப் பேரும் ஆஜர் செய்யப்பட்டபோது - நீதிவான், இந்த எட்டுப் பேரையும் தலா 2,000 ரூபா சரீரப்பிணையிலும், ஒவ்வொரு வரையும் தலா 10 ஆயிரம் ரூபா ஆட் பிணையிலும் செல்ல அனுமதி வழங் கியதுடன், இந்த எட்டுப் பேரும் குடத் தனைக்குள் நுழையக்கூடாதெனவும் உத்தரவிட்டு வழக்கை நாளைய தினத்துக்கு ஒத்திவைத்தார்.

### யாழ்.பொது...

பின்னர் மாலை 3 மணியளவில் யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடை பெறும் மாநாட்டில் சதீஸ் நம்பியார் கலந்துகொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடு கள் சபையின் பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகையாளர்களும் கலந்துகொள் ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற் றம் சம்பந்தமாக விரிவாகக் கலந் துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை - கொழும்பில் தங்கியுள்ள ஜெனரல் நம்பியார், நேற்று யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்ட பலரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய தாகத் தெரியவருகிறது. (லி)

### தமிழ்ப் பெண்.....

இதேவேளை - களுத்துறை சிறைச்சாலையில் தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்குமாறுகோரி - சிறைச்சாலைக் கூரை மீது ஏறி உண்ணாவிரதம் இருந்துவந்த கிருஷ்ணபிள்ளை செல்வரட்ணம் நேற்று இரத்த வாந்தி எடுத்த நிலை யில் மயக்கமடைந்தார்.

இது இவ்வாறிருக்க, இன்று சுதந் திர தினத்தை தாம் துக்கதினமாகக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித் துள்ள களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ் அரசியற்கைதிகள், கறுப்புப்பட் டிகளுடன் இன்று உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தெரிவித் துள்ளனர்.

தமது விடுதலையைப் பற்றிப் பேச மன்னார் ஆயர் இராயப்பு யோசப், அமைச்சர் மிலிந்த மொற கொட ஆகியோரைச் சந்திக்க வேண்டுமெனவும் அறிவித்துள்ள அவர்கள் -

விரைவில் சாகும்வரை உண் ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக் கப் போவதாகவும் - இம்முறை தமது போராட்டத்திற்கு தமிழ்ப் பகுதிகளி லுள்ள வெகுஜன அமைப்புக்களும், பல்கலைக்கழக, பாடசாலை மாண வர்களும் முழுமையான ஆதரவு தர வேண்டுமெனவும் ஊடகங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (200)


## மரண அறிவித்தல்

'கலாபூஷணம்', 'சங்கீதபூஷணம்'

**திருமதி அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை**

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை 'கலாபூஷணம்', 'சங்கீத பூஷணம்' திருமதி அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை நேற்று (03.02.2003) திங்கட்கிழமை கரவெட்டியில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் சு.மரியாம்பிள்ளையின் (இராசு) அன்பு மனைவியும், றூபன் (தினக்குரல் - கொழும்பு), சுபேந்திரன் (அருள் ஊற்று - கண்டி), வரதராஜன் (சக்தி TV), ராஜினி (ஸ்கொட்லண்ட்), காலஞ்சென்ற தீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*புனித அந்தோனியார் கோவிலடி, கரவெட்டி.*

தகவல்: **சு.மரியாம்பிள்ளை (கணவர்)**

(சி-558)


## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.55 | 96.99 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.01 | 159.87 |
| 1 யூரோ | 103.28 | 104.48 |
| 1 சுவிஸ் பிராங் | 70.50 | 71.64 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.15 | 57.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.